1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 45-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 15-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## உத்தரிப்பு ஸ்தல யாத்திரை

நீங்கள் வருடந்தோறும் பல் வேறுபதிகளுக்கும் யாத்திரை செய்து வருகிறீர்கள் அல்லவா? சிலவேளை ஒரேபதிக்கே பல முறை யாத்திரைசெய்கிறீர்கள் அல்லவா? ஆனல், நீங்கள் எப்போதாவது உத்தரிப்புஸ்தலத்துக்கும் யாத்திரை செய்ததுண்டா? இதைக்கேட்டதே அந்த ஸ்தலத்துக்கும் யாத்திரைசெய்வதுண்டா? யாத்திரைசெய்யலாமா? இது என்ன விந்தை? என்று உங்கள்மனதில் கேள்விகள்எழுமானல், அஃது ஓர்ஆச்சரியமன்று.

ஆம், உத்தரிப்புஸ்தலத்துக்கும் யாத்திரைசெய்யலாம். வழமையிலே யாத்திரைத்தலங்களுக்கு அந்தந்த யாத்திரைக் காலங்களில் மாத்திரம் செல்லலாம். ஆனல், உத்தரிப்பு ஸ்தலத்திற்கோ இன்னகாலத்திற்றான் செல்லலாம்என்ற நியதியில்லை. மனமுண்டானல், அனுதாபமுண்டானல், அனுதினமும், அல்லும்பகலும், எந்த நேரமும், பணச்செலவோ, பயணச்சிரமமோ எதுவுமேஇன்றி, யாதுமோர் கட்டுப்பாடுமின்றி, இஷ்டம்போல் அங்குயாத்திரை செய்யலாம்.

சிறைச்சாலையிலே எமதுஇனசனராய், சிநேகிதராய், நமக்கு அறிமுகமானவராய் எவராவது இருந்தால், சந்தர்ப்பம்கிடைக்கும்போது அவரைப் போய்ச்சந்தித்து, அனுதாபந்தெரிவித்து, ஆறுதல்சொல்லி வருகிறோம் அல்லவா? உத்தரிப்புஸ்தலமும் ஓர் சிறைச்சாலையே. நமதுஇனசனராய், சிநேகிதராய், நமக்கு அறிமுகமானவராய், கிறீஸ்தவர்கள் என்றமட்டிலே சகோதரஉரிமை பாராட்டுவோராய் எண்ணிறந்த ஆத்துமாக்கள் அந்தச்சிறைச்சாலையில் தாங்கொணுவேதனை அனுபவிக்கிறார்கள்என்பதை அறிந்திருக்கிறநீங்களும் அந்தஸ்தலத்துக்கு ஓர்தரம் யாத்திரைசெய்து பார்த்தால்என்ன! யாத்திரை செய்யப் பழகிக்கொண்டால் என்ன! உலகமுழுவதிலும் உங்களைப்போலும் கிறீஸ்தவர்கள் அநேகர் தினமும்பலதரம் இந்த யாத்திரையைச்செய்து அநேக ஆத்துமாக்களை அந்தஸ்தலத்திலிருந்தும் விடுதலையாக்கிவரும் போது நீங்களும் அவ்வாறு செய்தால்என்ன!

உத்தரிப்புஸ்தலத்துக்கு யாத்திரைசெய்வது எப்படி? மருதமடுச் செபமாலைமாதா திருப்பதிக்கு அல்லது தலைவில்லுச் சந்தானுள்மாதா திருப்பதிக்கு ஓர்தரம் யாத்திரைசெய்த நீங்கள் பிறகு அந்தயாத்திரையைப் பலமுறைகளிலும் நினைவுகூர்வதில்லையா? நினைவினல் அங்கு யாத்திரைசெய்வதில்லையா? அவ்வாறு செய்து மாதாவைக் கையெடுப்பதில்லையா? மன்றாடுவதில்லையா? இவ்விதம்நினைவினல் உத்தரிப்புஸ்தலத்துக்கும் யாத்திரைசெய்யலாம். நினைத்த நேரமெல்லாம் யாத்திரைசெய்யலாம். நாட்கணக்கிலே, வாரக்கணக்கிலே இதற்குக்காலம் வேண்டியதில்லை. ஐந்துநிமிஷத்திலும் முடித்துப்போடலாம்.

### ஆத்துமாக்களின் தாசன்

அப்படியானல் தடைதாமதமில்லாது இந்தயாத்திரையைச் செய்ய உடனேயே சம்மதிப்பீர்கள்தானே. நல்லது, வாருங்கள்! நினைவினல் ஒருசணநேரத்தில் உத்தரிப்புஸ்தலத்துக்கு ஓர்தரம் யாத்திரைசெல்வோம். இதோ, அங்குசென்றுவிட்டோம். நமது மனக்கண்முன்பாகக் கண்ணுக்கெட்டாத தூரம்வரையிலே ஓர்மகாசமுத்திரம் போன்று பிரமாண்டமான ஓர்அக்கினிப் பிரவாகம் காட்சியளிக்கின்றதே. எங்கும் ஒரேஅக்கினிச்சுவாலை மலைபோல்எழுந்து அலைமோதிக்கொண்டிருக்கிறதே. அந்தப் பெரும் அக்கினிப்பிரவாகத்திலே — பயங்கரநெருப்புச் சுவாலையிலே அதோபாருங்கள்! ஆ, என்னபரிதாபம்! எண்ணிக்கையில்லாத ஆத்துமங்கள் கிடந்து அனலில்விழுந்த புழுக்களைப்போல், புஷ்பங்களைப் போல் அந்தோ! துடிக்கின்றார்கள்! துவளுகின்றார்கள்! வேதனைதாங்கமாட்டாது ஓலமிடுகின்றார்கள்! உளம்வாடிப் பிரலாபிக்கின்றார்கள்! எங்கும் ஒரே அபயக்கூச்சல்! அழுகைக் குரல்!

சமுத்திரத்திலுள்ள மச்சங்களை எண்ணிக் கணக்கெடுத்தாலும் இந்தஸ்தலத்தில் கிடந்து தவியாய்த்தவித்து வேதனைப்படுகின்ற ஆத்துமாக்களைஎண்ணிக் கணக்கெடுக்க முடியாதுபோல் இருக்கிறதே! ஆ, என்ன பிரலாபகாட்சி! என்ன பரிதாப காட்சி! சற்றேநில்லுங்கள். அதோ! அந்தப்பக்கத்திலிருந்து கல்மனமும் கரைந்துருகும்படியான ஏதோ ஒரு அபயச்சத்தம் எழுகின்றது. செவிசாய்த்து உற்றுக்கேளுங்கள்.

"நாங்கள் இந்தஸ்தலத்தில் இருந்துகொண்டு அகோரவேதனைப்படுகிறோமே. ஒருநிமிஷம் போவது பலவருஷம்போவது போல் இருக்கிறதே. ஐயோ! எங்களை நினைப்பார்இல்லையே. எங்கள்வேதனையைத் தணிப்பார் இல்லையே. ஆருந்துணையற்ற பரதேசிகள்போல் அந்தரிக்கிறோமே. ஐயோ! யாவராலும் கைவிடப்பட்டுத் தவித்துஅந்தரிக்கிற ஆத்துமாக்களாகிய எங்கள்மேல் இரங்குவார்இல்லையே. ஆதலால் இங்கு யாத்திரை செய்து முதன்முதலாக எங்களைச்சந்திக்க வந்திருக்கின்ற நல்லபிறவிகளே! நீங்களாவது எங்கள்மேல் இரங்கமாட்டீர்களா? அனுதாபம்கொள்ள மாட்டீர்களா? எங்களுக்குஉதவி செய்து ஆறுதல்உண்டுபண்ண மாட்டீர்களா? எங்கள்வேதனையைக்குறைத்து இந்தச்சிறையினின்றும் எங்களை மீட்டுவிட மாட்டீர்களா? எங்களுக்கு நாங்களே ஏதொன்றுஞ்செய்ய முடியாதிருப்பதை நீங்கள் அறிவீர்கள்தானே! நாங்கள் அனுபவிக்கும் கொடியவேதனையை இப்பொழுது அறிவீர்கள் தானே. புண்ணியவான்களே! இரக்கமுள்ள சீமாட்டிகளே! இந்தயாத்திரையிலிருந்துநீங்கள் திரும்பியதும் எங்களைமறவாது எங்களுக்குஆறுதலும், இளைப்பாற்றியும் உண்டுபண்ண ஆனதெல்லாம் செய்யும்படியாய் உங்களைக் கெஞ்சிக்கேட்கிறோம். உங்கள்உதவியாலே நாங்கள் மோட்சஞ்சேர்ந்ததும் உங்களை ஒருபோதும் மறக்கமாட்டோம். ஒருநாளும் நன்றி மறக்கமாட்டோம்........"

ஏதோ திரை விழுந்தாற் போல் இருக்கிறது. சிலநிமிஷந்தானும் செல்லவில்லை. இதோ! எங்கள் உத்தரிப்புஸ்தல யாத்திரை முடிந்துவிட்டது. இப்போது உங்கள்மனம் பதைபதைக்கின்றதே. பதகளிக்கின்றதே. தேடுவாரற்று, ஆரும் உதவியற்று, சிந்திப்பாரற்று, உங்களைக் கையெடுத்துக் கொண்ட அந்தரித்த ஆத்துமாக்களாகிய அவர்களுக்கு ஏதோ கூடியஉதவி செய்ய வேண்டுமென்று உங்கள்மனம் தீவிரிக்கின்றதுஅல்லவா? அவர்கள்வேதனை தணியும்படி—அவர்கள் தீவிரமீட்சி அடையும்படி—அவர்கள் இளைப்பாற்றியைக்கண்டடையும்படி இன்று ஒருசெபமாலை சொல்லத்தான் வேண்டும்; சிலஒறுத்தல்கள், நற்கிரிகைகள் செய்யத்தான் வேண்டும்; நாளைக்கு ஒருபூசையாவது கண்டு, திவ்வியநன்மை உட்கொண்டு ஒப்புக்கொடுக்கத்தான் வேண்டும்; இல்லை, இல்லை, அவர்களுக்காக ஓர் பூசை செய்விக்கத்தான் வேண்டும்; சில மனவல்லயச்செபங்கள் சொல்லத்தான் வேண்டும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

### இஸ்பிரீ. ஆக. பின்வரும் 27-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(மத். 13: 31—35)

அக்காலத்தில் யேசுநாதர் சனக்கும்பல்களுக்கு இந்த உவமையைச் சொல்லித் திருவுளம் பற்றினதாவது: பரலோக இராச்சியம் ஓர்மனிதன் எடுத்துத் தன்நிலத்தில் விதைத்த கடுகுமணிக்கு ஒப்பாயிருக்கின்றது. அது சகலவிதைகளிலும் மிகச்சிறியதாயினும், வளர்ந்த பின்பு எல்லாப்பூண்டுகளிலும் அதிகபெரிதாகி, ஆகாயப்பட்சிகள்வந்து அதன் கிளைகளில்வசிக்கத்தக்கமரமாகும்என்றார். அவர் வேறொருஉவமையை அவர்களுக்குச் சொன்னார். அதாவது: பரலோகஇராச்சியம் மூன்றுமரக்கால் மா முழுதும் புளிப்பேறும்படி ஓர்ஸ்திரீ அதற்குள் மறைத்துவைத்த புளிக்காரத்துக்கு ஒப்பாயிருக்கின்றது என்றார். யேசுநாதர் இவைகளையெல்லாஞ் சனக்கும்பலுக்கு உவமைகளாய் உரைத்தார்; உவமைகளாலன்றி அவர்களோடு அவர் பேசினவரல்லர். இவ்விதம்நான் உவமைகளாற்பேசுவேன். உலகஆரம்பமுதல் மறைவாய் இருப்பவைகளைவெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டது நிறைவேறிற்று.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## துருக்கிக்குப் பாராட்டு

— நியூயோக்

துருக்கிதேசம் இரண்டு தலைமுறைகளிலே தனது சொந்த மதியூகத்தையும், அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ ஒத்தாசையையும் பயன்படுத்தி, ஜனநாயகபாதையிலே ஒப்பற்றமுன்னேற்றம் அடைந்திருப்பதாக அமெரிக்க விமானப்படைக் காரியதரிசி தோமஸ் கே. பின்லெற்றர் பாராட்டுகின்றார். துருக்கியிலே ஏகபோகஅதிகாரம்மாறி இப்போது ஜனநாயகம் தழைத்தோங்கிவருகின்றது.

துருக்கியின் 28-வது குடியரசுத்தினத்தைக் கொண்டாடுமுகமாக, இங்கு அமெரிக்க - துருக்கியர் சங்க ஆதரவில் நடந்தகூட்டத்தில் பேசும்போதுதான் அவர் மேற்கண்டவாறு கூறினர். மேலும் அவர் சொன்னதாவது: "துருக்கியின் எல்லையில் சோவியற்ருஷியா உள்ளது. அதன் ஏகாதிபத்திய பயமுறுத்தல்களைத் துருக்கி நெஞ்சுரத்துடன் எதிர்த்து நிற்கிறது. நவயுகதுருக்கியானது இராசிய, சமுதாயதுறைகளிலும், பொருளாதார வளப்பெருக்கிலும் அதிசய வெற்றிகளைச் சாதித்துள்ளது. ஜனநாயகமுறையிலே உண்டாகியுள்ள அதன்வளர்ச்சியானது நமதுமேலான மரியாதைக்கும், பாராட்டுக்கும் இலக்காகிறது. 1950-ம் ஆண்டு அங்கு நடந்ததேர்தலே அதன் சுதந்திர இராசியமுறைக்கு மகத்தான அத்தாட்சியாகும். அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதில் துருக்கிய மக்கள் போருக்கும் துணிந்தவர்கள். தாய்நாட்டைக் காக்கவேண்டும்என்ற உணர்ச்சிமிக்கவர் அம்மக்கள்."

## நிலைக்க வைக்கமுடியும்

— பரீஸ்

அமெரிக்க இராசாங்கமந்திரி திரு. டீன் அச்சிஸன் சென்ற 1-ந் திகதி பரீஸ்நகர் வந்துசேர்ந்தார். இங்கு சென்ற 7-ந் திகதிமுதல் ஐ. நா. பொதுமன்ற மகாநாடு தொடங்கியிருக்கிறது. அதில் பங்குபற்றவே அவர்வந்துள்ளார். தற்போதைய சர்வதேச நெருக்கடிகளைச் சமாளித்துக்கொண்டு, சமாதானத்தை நிலைக்கவைக்க முடியும்என்று அச்சிஸன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இந்தமகாநாடு சமாதானத்துக்கான போராட்டத்தில் ஐ. நாடுகள் ஏற்கனவே ஈட்டியுள்ள வெற்றிகளைப் பயன்படப்பொருத்த (ஒன்றுதிரட்ட) மகத்தான சந்தர்ப்பமாகும் என்றார்.

## தன்தலையில் தானே...

— வாஷிங்ரன்

சோவியற் பிரசாரம் நம்புதற்கரிய பொய்களைச்சொல்லித் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளுகிறதுஎன்று அமெரிக்க அரசாங்க உதவிப் பொதுஅலுவல் காரியதரிசி எட்வாட் பாரட் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுங்கால் குறிப்பிட்டார். சோவியற்அரசும், கம்யூனிஸ்தர்களும் ஒருபோதாவது சுதந்திரமான பொதுத்தேர்தலில் ஜெயித்ததேயில்லை. சோவியற்ருஷியாவிலும், அதன் சார்புநாடுகளிலும் நூற்றுக்கு 65 முதல் 90 வீதமானமக்கள் கம்யூனிஸ்தஆட்சியை அறவே வெறுக்கின்றனர். கிழக்குஜேர்மனியிலும் இதே கம்யூனிஸ்த எதிர்ப்புணர்ச்சி நிலவுகிறது. கம்யூனிஸ்தர்களிடம் சிக்கிய மக்களுக்கு இன்று உண்மைவிளம்பியாய் இருப்பது "அமெரிக்காவின்குரல்."

அமெரிக்க அரசாங்கத்தின் தகவல் பரப்புமதிட்டத்தின் ஒருபகுதியே "அமெரிக்காவின்குரல்." இக்குரலைக் கேட்கக்கூடிய ரேடியோப்பெட்டிகள் சுமார் 40 லட்சம் ருஷியாவில் இருக்கின்றன. மஸ்கோநகரில் 20 வீதத்தினருக்குமேலும், நாடுபுறங்களில் 60 முதல் 75 வீதமான மக்களும் "அமெரிக்காவின் குர"லைக் கேட்கின்றார்கள். இதைக்"குழப்ப" ருஷியா செய்ததந்திரம் பலிக்கவில்லை. சோவியற் சார்புநாடுகளில் ரேடியோப்பெட்டி வைத்திருப்போரில் பாதிக்கு மேற்பட்டவர்கள் உண்மைத் தகவல் தரும் "அமெரிக்காவின் குர"லினால் பயனடைகின்றார்கள்.

## கண்கண்ட சாட்சியம்

— வாஷிங்ரன்

பதினொருவருடகாலம் சோவியற் அடிமைத்தொழில் முகாம்களிலே இன்னலுற்ற டச்சுக்கார ஸ்திரீ நேர்ஸ் எலியனூர் லிப்பர் தற்சமயம் இந்நாட்டில் சுற்றுப்பிரயாணம்செய்து, தான் பட்டகஷ்டங்களை அமெரிக்க மக்களுக்கு எடுத்துச்சொல்லி வருகிறார். இங்கு மாதர்தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் முதற்தடவையாக ஆற்றிய சொற்பொழிவிலே அவர்பின்வருமாறு தெரிவித்தார்:

"ஆனந்தமாகவும், சுதந்திரமாகவும் வாழச் சோவியற் கம்யூனிஸ்தர்கள் ருஷியாவில் வழிசெய்து விட்டார்களாக்கும்என நம்பி, நான் மஸ்கோவுக்குப்போனேன். ஆனால், அங்குள்ள சனங்களோ சந்தேகத்திலும், பயத்திலும் உழன்றுகொண்டிருந்தனர். இரகசியப்பொலிசைநினைத்து எக்காலத்தும் அவர்கள் கிலிகொண்டிருந்தார்கள். "கம்யூனிஸ்தர்கள் ஒருநாள் நடுஇராத்திரியில் என்னைவந்து பிடித்துக்கொண்டுபோனார்கள். வழக்கா? விசாரணையா? ஒன்றும்கிடையாது. ஐந்துவருட கட்டாயத்தொழில் தண்டனை எனக்கு விதிக்கப்பட்டது."

உடனே இவளையும், இவளைப்போல அவதிக்காளான மற்றவர்களையும் ஆடுமாடுகளை ஏற்றிச்செல்லும் வண்டிகளிலே விலாடிவஸ்ரக்நகருக்குக் கடத்திச் சென்றனராம். 35 நாள் நீடித்த இப்பிரயாணத்தின்போது ஆகாரம், ஒன்றிரண்டு றொட்டித்துண்டங்களும், கருவாடும்தானும்.

"சிறைமுகாமில் சுகாதாரக்குறைவு சொல்லிமுடியாது. குளிரில்விறைத்து மாண்டவர்அநேகர். தொழிற்கூடங்களில் ஒருலட்சம் — ஒன்றரைலட்சம் அடிமைத்தொழிலாளிகள் — என்னைப் போன்றவர்—இருந்தனர். ஆறுமாதங்களின்பின் என்னைக் கோல்யாம்முகாமுக்குக் கொண்டுபோய், தினமும் 15 மணிநேரம் வேலைவாங்கினார்கள்."

## கம்யூனிஸ்தரை வெறுக்கிறார்கள்

— நியூயோக்

வேர்ஜினியாவிலே வில்லியம்ஸ்பர்க் எனுமிடத்தில் நிகழ்ந்த வைபவம் ஒன்றில் பேசுங்கால்: பல்வேறு சோவியற் சார்புநாடுகளிலுள்ள மக்களில் அநேகர் கம்யூனிஸ்தஆட்சியை வெறுக்கின்றனர் என்று அமெரிக்க இராசாங்க தகவற்பகுதியின் ஜெனறல் மனேஜர் தர்மன் எல். பேர்ணுட் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் கூறியதாவது: சோவியற் கிறம்லின் கும்பலுக்கு ஆதரவு தினமும் மங்கிக்கொண்டே வருகின்றது. கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்தின் உண்மையான பிற்போக்குத்தன்மையையும், பசப்பல், பித்தலாட்டத்தையும் அம்பலப்படுத்தும் உண்மையானதகவலை— ஏனைய சுதந்திரநாடுகள் எம்முடன்ஒத்துழைப்பதை உற்சாகப்படுத்தும் உண்மையானதகவலை — நாம் உபயோகிக்கக் கூடும்; உபயோகிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் எண்ணத்தூய்மையை உண்மைத்தகவல்கள் உணர்த்துகின்றன; நமது மனவலிமையிலும், தோள்வலிமையிலும் சுதந்திரநாடுகள் நம்பிக்கைகொள்ளச் செய்கின்றன.

கிறம்லினின் சர்வாதிகார ஆக்கிரமிப்பை நிறைவேறவிடாது செய்வதற்கு உண்மையான தகவல் கொடுப்பது பயன்படக்கூடும்; பயன்படுத்தப் படுகின்றது. சோவியற் சார்புநாடுகளிலுள்ள மக்களுக்கும், ஏன் ருஷிய மக்களுக்கும்கூடக் கம்யூனிஸ்த தன்னல ஆக்கிரமிப்புத் திட்டங்களின் கொடுமைகள் வெட்டவெளிச்சமாக்கப் படுகிறது. உண்மையான தகவல்களைப் பரவச்செய்து கம்யூனிஸ்தர்களின் எதேச்சாதிகாரக்கொட்டத்தை அடக்கவேண்டும்.

## உங்களுக்குத் தெரியுமா?

**1. கத்தோலிக்க திருச்சபையைத் தற்போது பிரஸ்தாபமாக ஆட்சிசெய்துவருகின்ற 12-ம் பத்திநாத பாப்பரசரைப்பற்றிய சில விசேடங்கள் எவை?**

(1) 13-ம்இன்னொசெந்து (1721—1724) பாப்பானவருக்குப்பின் பாப்பரசராகத்தெரியப்பெற்ற முதல் உரோமையர் இவரே. (2) 9-ம் கிளமேந்து (1667—1669) பாப்பானவருக்குப் பின் தமக்குமுன்னிருந்த பாப்பானவரிடமாக அவரது இராச்சியமந்திரியாராயிருந்து முதன்முதலாகப் பாப்பரசராகவந்தவர் இவரே. (3) 7-ம் பத்திநாத (1800—1823) பாப்பானவருக்குப்பின் முதன்முதலாகத் தமக்குமுன்னிருந்த பாப்பானவரின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர் இவரே. 1846-ம் ஆண்டுக்குப்பின் அர்ச். பேதுருவானவர்மகாலய சதுக்கத்தில் முதன்முதலாகப் பகிரங்கமாய்த் திருமுடிசூட்டப்பெற்றவர் இவரே.

**2. வல்தேர் என்பவன்யார்? அவன்சொன்ன தீர்க்கதரிசனம் என்ன? அவன்முடிவுஎன்ன?**

கடவுள்இல்லையெனச் சாதித்துவந்த நாஸ்திகர்குழுவுக்கு இவன் பேர்பெற்ற தலைவனாயிருந்தான். "இன்னும் 20 வருடங்களுக்குள் தெய்வம் ஓர்விளையாட்டுக் கருவியாய்விடும்" என்று 1758-ம்ஆண்டு மாசிமாதம் 25-ந்திகதியன்று படுதேவதூஷணம்ஒன்றைக் கக்கினான். அவ்வாறுகக்கி 20 வருடங்களுக்குப்பின், அதாவது 1778-ம் ஆண்டு மாசிமாதம்25-ந்திகதியன்று திடீரெனப் பயங்கரமான ஓர்வியாதி கண்டு இரத்தம்கக்கினான். அது தேவ தண்டனையென்று உணர்ந்தான் இப்பாதகன். தான்விரோதித்துவந்த குருமாரில்ஒருவரை வரவழைத்து, தான் முன்னர் தேவனுக்கும், வேதத்துக்கும் விரோதமாகப் பேசியவற்றிற்கும், எழுதியவற்றிற்குமாக உள்ளபடியே மனஸ்தாபப்பட்டு அவைகளையெல்லாம் மறுதலிப்பதாக அவர்சமுகத்தில்கூறினான். பின்னர் வியாதிஅதிகரித்தது. கடைசித்தேவதிரவிய அனுமானங்களைப்பெற ஆசித்தான். ஆனால், அவனதுநாஸ்திகதோழர்களோ அவனைக் குருவானவர்காண அனுமதிக்கவில்லை.கடைசியாகப் பயங்கரவேதனைக்குள்ளாய் நாலாபக்கமும் உருண்டு புரண்டு தன்னுடையதசையைத் தன் கையால் தானே கீறிக்கிழித்து, தன் மலத்தைத்தானே அள்ளிஉண்டு அவலமாய் இறந்தான்.

**3. "உத்தானமும், உயிரும் நானே; என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான்" என்று யேசுக்கிறீஸ்துநாதர் எப்போது வசனித்தார்?**

லாசர் மரித்துஅடக்கப்பட்டு நான்கு தினங்களின்பின் யேசுநாதர் பெத்தானியாவுக்கு எழுந்தருளுகிறார். அதை மார்த்தம்மாள் கேள்விப்பட்டு அவரை எதிர்கொண்டுபோய், "ஆண்டவரே, நீர் இங்கேஇருந்திரானால் என்சகோதரன் மரித்திருக்கமாட்டான். ஆயினும் இப்பொழுதும் நீர் சர்வேசுரனிடத்தில் எதைக் கேட்டாலும், அதைச் சர்வேசுரன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" எனச்சொல்லுகின்றாள். அப்போது யேசுநாதர் அவளைநோக்கி: "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" எனக் கூறுகின்றார். அதற்கு மார்த்தம்மாள் மறுமொழியாக: "கடைசி நாளிலே உத்தானத்தில் இவனும் உயிர்ப்பானென்று எனக்குத்தெரியும்" என்று சொன்னபோதுதான், யேசுநாதர் அவளைநோக்கி: "உத்தானமும், உயிரும் நானே; என்னில் விசுவாசமாயிருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான்" என்று வசனித்தருளுகிறார்.

**4. பிராணிகள் எவ்வளவு காலம் வாழ்கின்றன?**

பலபிராணிகள் மனிதரிலும் நீண்டகாலம் உயிர்வாழும். கடலாமை 400 ஆண்டு வாழ்கிறது. முதலையும் நீண்டகாலம் வாழும். அது தனது இயற்கையானஇடத்தில் 300 ஆண்டு வாழ்ந்திருக்கக்கூடும். திமிங்கலம் 500 ஆண்டும், சிலதிமிங்கலங்கள் 1000 ஆண்டும் வாழ்ந்திருக்கின்றன. கடற்பூஎன்னும் ஒருவகைக் கடற்பிராணி நீர்உயிர்க் காட்சிச்சாலையில் 60 ஆண்டு உயிரோடிருந்தது. பூனை 13 ஆண்டும், நாய் 15 ஆண்டும், முயல் 5 ஆண்டும், அன்னம், கழுகு, காகம் என்பன 100 ஆண்டும்வாழும். கிளியும், நாரையும் 60 ஆண்டும், வாத்து 50 ஆண்டும், கோழி 14 ஆண்டும், கனதிப்பறவை 24 ஆண்டும் வாழும்.

**5. பூமியுடைய நிழலின் நீளமென்ன?**

8,59,000 மைல். இந்தநிழல் வட்டமான முக்கோணவடிவாக வானவெளியில் செல்கின்றது.

**6. சூரியனுக்கு மிகவும் தூரத்திலுள்ள கிரகம் எது?**

புளூட்ரோ (Pluto) என்பது. இதற்கும், சூரியனுக்கும் இடையிலுள்ளதூரம் 368 கோடிமைல். இது பூமிக்கும், சூரியனுக்கும் இடையிலுள்ளதூரத்திலும் நாற்பது மடங்கு அதிகம். இக்கிரகம் 249 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகின்றது.

## நாளுசங்கதிகள்

— தங்கள்உயிருக்கே நேரக்கூடிய அபாயத்தைப் பறுவாய்பண்ணாது சுதந்திரத்தைத்தேடி மாசந்தோறும்இருபதினாயிரமபேருக்கு மேற்பட்டமக்கள் கம்யூனிஸ்தஆட்சி நடைபெறுகின்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளைக்கடந்து வெளியேறிக்கொண்டிருப்பதாகச் "சுதந்திர படையணி" ஸ்தாபனம் நியூயோக்நகரிலே செய்தி வெளியிட்டிருக்கிறது. இவர்களில் பெரும்பான்மையினர் மலைகளுக்கு மேலாகக் கால்நடையாகவும்,ஆறுகளை நீந்தித்தாண்டியும் தப்பி வெளியேறுகின்றார்கள்.

— அயர்நாட்டின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகரிலிருந்து சமீபத்திலே திவ்வியஇஸ்பிரீத்துசாந்துவின் சபையைச்சேர்ந்த 35 குருமார் இரு விசேஷஆகாயவிமானங்களிலே ஆபிரிக்காவைச்சேர்ந்த தென்நைஜீரியாவுக்கு வேதம்போதிக்கச்சென்றிருக்கின்றனர். அயர்லாந்திலிருந்து அத்துணைபெருந்தொகை மிஷனரிமார் ஆகாயவிமானத்தில் மிஷன்நாடு ஒன்றுக்குச்சென்றமை இதுவேமுதன் முறையாம்.

— பவேறியாவிலே அல்ப்ஸ்மலைச் சாரலில் இருந்துவந்த ஹிற்லரின் உல்லாசமாளிகையும், அவர்துணைவர்களான கோறிங், மாட்டீன்போர்மன் என்பவர்களின் உல்லாசமாளிகைகளும் ஜேர்மன் அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப் பட்டுவிட்டன. ஹிற்லரின்மாளிகை ஏலவேமுற்றாக இடிக்கப்பட்டுவிட்டது. அதுஇருந்தஇடத்திலே மரங்கள்வளர்க்கப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### எல்லாம் இறைவன்செயல்

இருபதுவயசுடைய ஓர் இளம் பிரான்சிய கன்னியாஸ்திரிக்கு க்ஷயரோகம் பீடித்துவிட்டது. அதற்கு வைத்தியசிகிச்சை செய்தபோது அவள் குணப்பட்டாள். ஆனால், அவளுடைய சுவாசப்பை ஒன்று நீக்கப்படலாயிற்று. அதனால் ஒற்றைச் சுவாசப்பையுடன் விடப்பட்டாள். என்றாலும், அவளுடைய நாட்டம் முழுவதும் ஓர் மிஷனரிய கன்னியாஸ்திரியாக வேண்டுமென்பதே. ஆனால், இது நம்பிக்கையற்றதாய்க் காணப்பட்டது. நிற்க, அதே கன்னியாஸ்திரியான சங். அன்ரோனிறு தாயார் 65 வருடகாலம் மிஷனரிய தொண்டுகள் ஆற்றியபின்னர் தனது 91-ம் வயசில் இப்போதே யப்பானிய தேச கோபேநகரில் காலஞ்சென்றிருக்கின்றார். தனது அருமையான தொண்டுகளையிட்டு இவர் யப்பானிய சக்கிரவர்த்தியால் முகமுகமாகவாழ்த்திக் கொண்டாடப் பெற்றிருக்கின்றார். பிறநாட்டவர் ஒருவர் சக்கிரவர்த்தியாலே இவ்விதம் கௌரவிக்கப்பெற்றமை ஓர் அபூர்வசம்பவமாகும்.

### மரணம் வாழ்வைத்தருகிறது

"இத்தனை நூற்றாண்டுகளெல்லாம் வேதகலாபனை நடந்தபிறகும், இன்னுமேநாம் இங்குஉயிர் வாழ்ந்திருக்கிறோம்; தனது சரித்திரத்தில் எப்போதாவது இருந்ததைக்காட்டிலும் உலகில் இன்று அதிகமான கத்தோலிக்கர் இருக்கின்றனர்" என்று எடின்பறோநகர் வரவேற்புவிழா ஒன்றில் வண. அய்க்னெல்லஸ் அன்ட்று சுவாமியார் கூறியிருக்கின்றார். "திருச்சபையின் செல்வாக்கு மனிதஉளங்களிலும், இதயங்களிலும், ஆத்துமங்களிலும் அநேகமாகப் பெரிதாய் அல்லது முன்னர் எப்போதாவது இருந்ததைக்காட்டிலும் மிகப்பெரிதாய் இருக்கின்றது" என்றும் அவர் கூறிகின்றார். வேதசாட்சிகளின் இரத்தம் திருச்சபையைப் பிறப்பிக்கும் வித்துஅன்றோ!

### திருப்பட்ட வேண்டுகோள்

சமீபத்திலே றோமாபுரியில் நடந்தேறிய சாதாரண கத்தோலிக்கரின் அப்போஸ்தலத்துவ உலகமகாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரெல்லாம் ஒன்றுசேர்ந்து முத். பத்தாம் பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளுவதற்கான விசாரணையைத் தொடக்குமாறு பரிசுத்த பாப்பரசருக்கு மனுப்பண்ணியிருக்கின்றார்கள். வழமையிலே முத்திப்பேறுபட்டத்துக்கும், அர்ச்சியசிஷ்டபட்டத்துக்குமிடையில் அநேகவருடங்கள் செல்லுகின்றன. ஆனால், நிகழும் நூற்றாண்டிலே முத்திப்பேறுபட்டம் அருளப்பட்ட ஒரு தொகையான சுத்தவாளர், சுத்தவாளிகள் ஏற்கனவே அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பட்டுள்ளார்கள். இவர்களிலே 1947-ம்ஆண்டு சித்திரைமாதம் முத்திப்பேறுபட்டமும், சென்ற வருடம் அர்ச்சியசிஷ்டபட்டமும் அருளப்பெற்ற அர்ச். மரிய கொறெற்றியும் அடங்குகின்றாள்.

### பாகிஸ்தானும் வத்திக்கானும்

பரிசுத்தஸ்தானமும், பாகிஸ்தானும் தங்களிடையே இராசீய உறவை ஏற்படுத்துவதற்கு உடன்பட்டிருக்கின்றன. அதனால்வத்திக்கான் தனது ஸ்தானீகர் ஒருவரைப் பாகிஸ்தானில் கொண்டிருக்கும். அதற்குப் பதில்பாகிஸ்தானும்தனது ஸ்தானீகர் ஒருவரை வத்திக்கானில் உடையதாயிருக்கும். தற்போது பாகிஸ்தானிலே வத்திக்கான் பிரதிநிதியாய் அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாகிய வான் மில்ரன்பேர்க் அதிமேற்றிராணியார் கராச்சியில் இருந்து வருகின்றார்.

### சற்பிரசாத மகாநாடு

வருகிற 1952-ம்ஆண்டு வைகாசிமாதம் 26-ந்திகதி முதல் ஆனி 1-ந்திகதிவரையிலே ஸ்பானியதேச பார்சலோனநகரில் சர்வதேச சற்பிரசாதமகாநாடு நடந்தேறவிருக்கின்றது. அது நடைபெற இன்னும் ஏழுமாதம் இருக்கும்போதே அங்கு விடுதிகள்கேட்டு 1லட்சத்து 50ஆயிரம் பேர் மனுப்பண்ணியிருக்கின்றனர். பார்சலோன துறைமுகத்தில் நிற்கும்கப்பல்கள் மிதக்கும் ஹொட்ரேல்களாக அப்போது உபயோகிக்கப்படும். இந்தமகாநாடு 1938-ம்ஆண்டு புடாபெஸ்ற் நகரில் நிகழ்ந்த மகாநாட்டுக்குப் பின் முதன்முதலாக நடைபெறுவதாகும்.

### மிகப் பாரியசுருபம்

இவ்வருடம் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றவரான அர்ச். அன்ரனி கிளாறெற் என்பவரின் 15தொன் நிறைகொண்ட பாரியசுருபம் ஒன்று பார்சலோன மாகாணத்திலே சலென்ற்எனும் அவரது பிறந்த இடத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஆதாரபீடம் 53 தொன்னும், முகப்புச் சிகரம் 10 தொன்னும் நிறைகொண்டன. இந்த அர்ச்சியசிஷ்டவர் சந்தியாகோநகர் அதிமேற்றிராணியாராயும், பிந்த ஸ்பானியதேச இரண்டாவது இசபெல்லா இராணியின் ஆத்துமகுருவாயும் விளங்கியிருந்தார். இவர் அடியிட்ட மரியாயின் மாசற்றஇருதய மிஷனரிய குருமார்சபையானது லத்தீன் அமெரிக்கநாடுகளிலும், ஸ்பெயினிலும் வெகுவாகப் பரந்திருக்கின்றன.

### "பாத்திமா பட்டினம்"

திருக்குடும்பம் எகிப்துக்குத் தப்பியோடிச் செல்லும்போது ஒதுங்கியிருந்ததாகப் பாரம்பரியமாய்ச் சொல்லப்பட்டுவருகிற குகைக்குச் சமீபமாக "பாத்திமா பட்டினம்" ஒன்று கட்டப்பட்டிருக்கிறது இப்பட்டினம் பாத்திமாநாயகிக்குத் தோத்திரமாக ஓர் சேத்திரத்தையும், ஓர் விசாரணைக்குருவரின் மனையையும், ஓர் பாடசாலையையும். ஓர்கோவிலையும், அநேக தருமஸ்தாபனங்களையும் அடக்கியிருக்கிறது. நைல்நதி முகத்துவார விக்கார் அப்போஸ்தலிக்குவான மொஞ். அன்ட்று புறொஸ் ஆண்டவரால் இந்தப்பட்டினம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது.

# பூசைக்குச் சென்ற ஏழைச் சிறுவன்

( எஸ். ஜெயம் )

ஆனந்தபுரி என்பது ஒருசிறுநகரம். அதில் அருளானந்தம் என்பவர் ஓர் பேரான பணக்காரர். அவரது ஒரே புதல்வியே அருள்மரி என்பவள். இவள் தனித்துப் பிறந்தவள் ஆதலால் பிறரோடு கூடிவாழும் மனப்பான்மை இல்லாதவள். ஓர்நாள் பூசையில் பராக்குக்கு இடங்கொடாவண்ணம் தன் மனதைச் செபத்தில்செலுத்திக்கொண்டிருந்தாள். என்றாலும் அன்று துரிதமாகவந்து தன்முன்னால் ஆசனத்தில் அமர்ந்த சிறுவனைக் கவனியாதிருக்க அவளால் முடியவில்லை.

அவனுக்கு வயது ஒன்பது இருக்கும். மார்கழிமாதக் கடுங்குளிரிலும் அவன் மேலில்இருந்தது ஒரு சிறிய கந்தைத் துணிதான். அவன்தலை வாரிவிடப்படாமல் அலங்கோலமாக இருந்தது. அவனது சூழ்நிலை அவனைச்சிறிதும் அமைதியாமல் இருந்தும் அந்தப்பனியில் பூசைக்கு வந்திருந்தான். ஏழையின்நிலையைக் கண்கூடாய் அறியாமல் புத்தகவாயிலாக மாத்திரம் அறிந்திருந்த அருள்மரியின் கண்கள் ஆச்சரியத்தால் அகலவிரிந்து அடிக்கடி அவனையே உற்றுப்பார்த்தன. அவள் மனமோ செபஞ்சொல்ல மறுத்துத் தன்னையும், அவனையும் ஒப்பிட ஆரம்பித்தது.

செயற்கைச் சாதனங்கள் நிறைந்த பெரியவீடு. ஏவியதைச் செய்யப் பணியாளர் பலர். கம்பளி ஆடை, கம்பளிப் போர்வையுடன் சுகமாக நித்திரைசெய்யப் பஞ்சுப்படுக்கை. முகங்கழுவ வெந்நீருடன் அதிகாலையில் எழுப்பவரும் பணிப்பெண். விலைஉயர்ந்த, குளிர்தாங்கும் ஆடையுடன் கோவிலுக்குவர ஓர் அழகிய கார்.

ஆனால், அவனோ ஓர் பழங்குடிசையில் பெற்றோருடனும், உடன்பிறந்தோருடனும் மேலிலே சரியான துணியின்றிப் படுத்திருக்கிறான். அதிகாலையில் கண்விழித்ததும் பனியினால் பல் கொடுக, கைகால்கள் மரத்துப்போக, குளிர்ந்தநீரில் முகம்கழுவிக் குளிரினால் உடல்முழுவதும் நடுங்கக் கோவிலுக்கு ஓடிவந்திருக்கிறான்.

போனவருடம் அருள்மரியின் பெற்றோர் இறந்துவிடவே அவள் கிராமத்திலுள்ள தன் சொத்தையெல்லாம் விற்றுவிட்டு நகரில் ஓர்அழகிய வீடு வாங்கி வசித்துவருகிறாள். பெற்றோருக்கு ஒரே பிள்ளையாதலால்அவள் பிறருடன்கூடிவாழ விரும்பவில்லை. தான் நான்குபாஷைகளில் பெற்ற பாண்டியத்தினால் அர்ச்சியசிஷ்டர்களின் சரித்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதிப் பலபத்திரிகைகளுக்கு அனுப்புவாள். பத்திரிகையாளர் இவளை ஓர் 'கத்தோலிக்க கவி' என்பர். தான் உண்டு, தன்கவிதை உண்டு; கோவில் உண்டு என்றிருப்பாளே அல்லாமல் பிறருடைய வழிகளுக்குப் போகமாட்டாள். அதனால் அவர்களுடன் ஒருசிறிய தொடர்புமின்றி இருந்தாள். ஆனால், தன் அயலாருக்காக ஆண்டவரை மன்றாட மறவாள். தினப்பூசை தவறாள். தன் பங்குக்கோவிலுக்கு மனத்தாராளமாகப் பணஉதவி செய்வாள். எழுதுவதிலும், படிப்பதிலும், பாடுவதிலும், செபிப்பதிலுமே தன்வாழ்நாளைச் செலவழித்தாள்.

வறுமையின் வடிவமான அச்சிறுவனைப் பார்த்ததுமுதல் அவள் மனதில் நிம்மதியில்லை. ஒவ்வொரு விநாடியும் அவனைப்பற்றிய நினைவாகவே இருந்தாள். அவனது அழுக்கடைந்த, இரத்தப்பசையற்ற முகம் அவள் மனக்கண்முன் அடிக்கடி தோன்றியது. உண்ணும்போதும், உடுத்தும்போதும், உறங்கும்போதும் அவனைப்பற்றிய நினைவு அவளைப் பெரிதும் வாட்டியது. அயலாரிடம் அண்டிப்பழக விரும்பாத அருள்மரி முன்பின்தெரியாத அந்த அற்பசிறுவனிடம் தன்இயல்பைமீறி அன்புகொண்டது பெரிதும்விந்தையே! ஓர்நாள் பூசைமுடிந்தவுடன் தனது ஆசையை அடக்கமுடியாதவளாய்ப் பங்குச்சுவாமியாரிடம் அவனைப்பற்றி விசாரிக்கச் சென்றாள்.

"சுவாமி! பரிதாபகரமான கோலத்தில்கிழிந்தஆடையுடன் மிகவும் கேவலமான நிலையில் கோவிலுக்குவரும் அந்தச்சிறுவன் யார்? நான் அவனோடு பழகாவிட்டாலும் அவனிடம் எனக்கு அலாதியான பிரியம்உண்டு"

"அவன்பெயர் ஜோண். அவன் தகப்பன் ஆதியில் நல்லகத்தோலிக்கனாக இருந்தவன். தற்சமயம் வேதத்தில் விசுவாசம் குன்றிப்போய் வேதகடமைகளை அனுசரியாமல் இருக்கிறான். தாயோ ஓர் அஞ்ஞானி. அவன்தான் கடைசிப்பையன். மூத்த இருவரும் கோவிலுக்கே வருவதில்லை. இவன் மிகவும் நல்லபையன். இவன் அவ்வீட்டிலே இருந்தால் இவனும் வேதத்தை இழந்துவிடுவான்.

"சுவாமி! உங்களைப்போலொத்த குருமார் அவனுக்கு ஒரு ஒழுங்கும் செய்யமுடியாதா?"

"அவ்வீட்டார் எங்களைத் தூரத்தில் கண்டதே கதவு, சன்னல்களுக்கு, இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிடுகிறார்கள். மேலும் சேவாசங்கத்தாருக்கோ இப்படிப்பட்ட வீடுகளைச்சந்திக்க நேரமில்லை. இப்படி அவிசுவாசமுள்ள குடும்பங்களுக்குச்செல்ல ஓர் தர்மசிந்தையுள்ள பெண்மாத்திரம் இருந்தால்......"

"உங்கள் பாடசாலையிலே சிறுவர் விளையாட்டுச்சங்கத்தில் அவன் சேர்ந்திருக்கிறானா?"

"அவன்சேர அதிகம் விரும்புகிறான். ஆனால், அவனுக்குப் பலவிதவசதிக் குறைவுகள் இருக்கின்றன. முக்கியமாகக் கந்தைஆடையுடன், வரமிகவும் நாணமுறுகிறான்."

அருள்மரி கோவிலுக்குச்சென்று ஏழைஜோணுக்காகச் செபித்தாள். செபத்தின்மூலம் பிறருக்கு உதவிசெய்கிறோம் என்பதில் ஓர் தனிப்பெருமை அடைந்துவந்தஅருள்மரி அன்று தான் செபித்ததில் திருப்தி அடையாதிருந்தாள். பிறருக்கு உதவிசெய்யச் செபங்களோடு இன்னும் பலகாரியங்களும் அவசியமென்றுஉணர்ந்தாள். அருமை ஜோணுக்கு எவ்விதம் உதவிபுரியலாம் என்ற எண்ணத்தில் இரவு முழுவதும் கழித்தாள். கடைசியாக "உழைப்பின்றிச் சேபம் மாத்திரம் ஓர் ஏழைக்கு உணவும் உடையும் அளிக்காது" என்ற முடிவுக்குவந்தாள்.

மறுநாள்காலை பங்குச்சுவாமியாரின் உதவியால் அவன்வீட்டைக் கண்டுபிடித்தாள். தன்வீட்டின் முன் ஓர் அழகிய கார்வந்து நிற்பதை அறிந்த ஜோணின்தாய் துரிதமாக வீட்டின் கதவைத்திறந்து அருள்மரியை வரவேற்

( தொடர்ச்சி 6-ம பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**கார்த்திகைமாதம் 1951**

| | | |
|---|---|---|
| வெ | 16 | அர்ச். ஜேர்த்துறூத்தம்மாள் (வெ) |
| சனி | 17 | அர்ச். கிறகோரியார் (வெ) |
| ஞா | 18 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 27-ம் ஞாயிறு — அர்ச். இராயப்பர் சின்னப்பர் கோயில் அபிஷேகத்திருநாள் (வெ) |
| திங் | 19 | அர்ச்.எலிசபேத்தம்மாள் (வெ) |
| செவ் | 20 | அர்ச். பெலிக்ஸ் தேவலோயி (வெ) |
| புத | 21 | தேவமாதா கோயிலில் காணிக்கைவைக்கப்பட்ட திருநாள் (வெ) |
| வியா | 22 | அர்ச். செசிலியம்மாள் (சி) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

கார்த்திகைமாதம் 15-ந்திகதி


## இக்கால தீமைகள்பற்றிப் பரிசுத்த பாப்பரசரின் சாதாரண நிருபம்

( முன்தொடர்ச்சி )

### சிறையிலிருந்து துன்புறும் வேதசாட்சிகள்

நமது ஆசாரத்துக்குரிய சகோதரர்களே! நமது அன்பான பிள்ளைகளே! நீங்கள் செபமாலையைக் கையிலேந்திச் செபிக்கும் பொழுது, எங்கள்திருமறையின் சத்தியத்துக்குச் சாட்சிகளாக இந்தக்காலத்திலே கைதுசெய்யப்பட்டுச் சிறைச்சாலைகளிலும், மறியற்காரரைப் பெருங்கூட்டமாக அடைத்துக் கொடூர ஆக்கினை செய்து வேலை வாங்கும் சிறை முகாங்களிலும் வாதிக்கப்பட்டுத் தியங்கும் பல்லாயிரக்கணக்கான எமது சகோதரர்களையும் மறந்து போகவேண்டாம்.

அந்தநிஷ்டூர சிறைமுகாங்களிலே தங்கள் மேற்றிராசனங்களிருந்து வலோற்காரமாக இழுத்துக் கைதிகளாக்கப்பட்ட பலமேற்றிராணிமார் இருக்கின்றனர். தேவனுடையவும், அவருடையதிருச்சபையுடையவும்பூசிதமான உரித்துகளைக் காப்பாற்றுவதற்காக அவர்கள்வீரத்துவத்துடன் வாதாடினார்கள். அதனாலன்றோ, அவர்களுக்குக் கிடைத்தது நிட்டூர கடுஞ்சிறைத்தண்டனை. எத்தனைஎத்தனை பெற்றார், பிள்ளைகள், வாலர்கள், கன்னியர்கள் தங்கள்வீடுகளிலும், குடும்பங்களிலும்இருந்து குரூரமாகப் பிரித்தெடுக்கப்பட்டு, தேசப்பிரஷ்டம்செய்யப்பட்டு அந்நியநாடுகளுக்குக்குக் கைதிகளாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எத்தனை குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரீமார் காணுத்தேசத்திலே கடுஞ்சிறையிருந்து அழுந்துகிறார்கள். நமது பிதாவுக்குரிய இருதயமானது அவர்கள்படும் பாடுகளை நினைக்கும்போது நைந்து உருகுகின்றது. அவர்களை நாம் விசேஷஅன்புடன் நமது இருதயத்தில் இருத்திவைத்திருக்கிறோம். நீங்களும் பிள்ளைகளே! எங்கள் சத்தியமறையின் உச்சித கிறீஸ்துவசகோதர அன்பினால் தூண்டப்பட்டு நம்முடன் ஒன்றித்து அவர்களுக்காக அயராது வேண்டுதல்செய்யுங்கள். எங்கள்பரிசுத்த தேவதாயாரும், வேதசாட்சிகளின் இராக்கினியுமான மோட்சஇராக்கினியின் பீடத்தண்டை முழந்தாளிட்டு அந்த எங்கள்அருமையான வேதசாட்சிகளுக்காக எங்கள் தாயாரினது கனிந்தஇருதயம் உருகி, அவர்களினது சிறையை நீக்கவேண்டுமென்று இடைவிடாது செபஞ்செய்யுங்கள். அவருடைய இரக்கம்நிறைந்த இருதயத்துக்கு அவர்களை ஒப்புக்கொடுங்கள்.

### நித்திய சம்பாவனை

அவர்அருள்புரிவார்! தவருதுபுரிவார்! அணைகடந்தஅன்புடன் தேவதாயார் அவர்கள்படும் பாடுகளைநீக்கி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். அவர்களின் இதயங்களிலே அவர்களுக்குக் கிடைக்கப்போகும் நித்தியசம்பாவனையை நினைப்பூட்டி, நம்பிக்கையினால் அவைகளை நிரப்பிவிடுவார். மேலும் இவ்வித துன்பதுரிதங்களிலிருந்து அவர்களை விடுதலையாக்கும்நாளையும் தீவிரிக்கச் செய்யச் சித்தங்கூருவாரென்பது நிச்சயம்.

ஓ! நமது ஆசாரத்துக்குரிய சகோதரர்களே! என்றுமே உங்களில் காணப்படும் வேதவைராக்கிய வாஞ்சையினாலே நீங்கள்தூண்டப்பட்டுப் பிதாவுக்குரிய நமது வேண்டுகோள்களை உங்களுக்குக்கீழுள்ள குருமாருக்கும், விசுவாசிகளுக்கும் அறிவிப்பீர்களென நாம்திடமாக நம்புகின்றோம். உங்களுக்குத்தகுதியான தருணத்திலே இதைச்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். உலகின்எத்திசையிலும் பரவியிருக்கும் எமதுபிள்ளைகள் யாவரும் நம்முடைய வேண்டுகோளை ஏற்று அதன்படி ஒழுகுவார்கள்என்ற மனத்தென்பு நமக்குமிகவும் உண்டு. உங்களுக்கும், உங்கள் ஞானமந்தைகளுக்கும், பத்தியுடன் பரிசுத்தசெபமாலையை நமதுகருத்துகளுக்காகச் செபிப்பாருக்கும் நமதுஅப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளுகின்றோம்.

முற்றிற்று

## சுதேச வர்த்தமானம்

### திருஇருதயக் கூட்டம்

சம்பத்திரிசியார் கல்லூரித் திருஇருதயச்சபைப் பிரதம கிளைச்சங்கத்தின் மாதாந்தகூட்டம் 18-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்குக் கல்லூரி நூல்நிலையத்தில் நடந்தேறும். அதிலே திரு. ஜே. ஏ. வி. சில்வேஸ்றர் அவர்கள் "ஓர் கத்தோலிக்கனுகச் சீவிப்பது எப்படி" எனும் விஷயமாய் ஓர் சொற்பொழிவாற்றுவார்.

### குருப்பட்டாபிஷேகம்

திரு. ஜோர்ஜ் டெனிஸ் அவர்களின் புதல்வரான யேசுசபையைச்சேர்ந்த வண. பி. டெனிஸ் பிறதர் சென்றபுரட்டாசிமாதம் 29-ம் 30-ந் திகதிகளிலே இந்தியாவில் புனாநகரிலுள்ள செண்தெநொபிலி குருமடத்தில் உபதியாக்கோன், தியாக்கோன் எனும் மேற்பட்டங்கள் பெற்றிருக்கின்றார். வருகிற மார்கழிமாதம் 3-ந்திகதியன்று இவர் குருத்துவாபிஷேகம் செய்யப்பெறவிருக்கிறாரென அறிகின்றோம்.

### கொழும்புப் பொருட்காட்சி

கொழும்புப் பொருட்காட்சி வருகிற மாசிமாதம் 16-ந்திகதி காலை 9-30 மணிக்கு எலிசபேத் இளவரசியால் திறந்துவைக்கப்படுமென்று முடிவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாசிமாதம் 19-ந்திகதிகாலை இளவரசியும், அவர் நாயகரும் பேராதனையிலே சர்வகலாசாலை கட்டப்பட்டுவரும் இடத்தைப் பார்வையிடுவார்கள்.

### பண்டித பரீட்சைப்பேறு

யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் இவ்வருடம் நடத்திய பரீட்சையிலே யாழ்ப்பாணம், சென் ஜேம்ஸ் பாடசாலை ஆசிரியர்களில் ஒருவரான திரு. எஸ். செல்வரத்தினம் அவர்கள் பண்டித பரீட்சையில் அரங்கேறியுள்ளாரென அறிந்து சந்தோஷமானோம். இவர்அப்பரீட்சையில் முதலாம்ஆளாகச் சித்திபெய்தியமையால் முகாந்திரம் சதாசிவஐயர் அவர்களின் ஞாபகார்த்தப்பரிசில் — அதாவது 50 ரூபாபெறுமதியான புத்தகப்பரிசில் வழங்கப்பெற்றிருக்கின்றார்.

### அதிகாரத்துக்கு வந்தால்

"இடதுசாரிகள் (கம்யூனிஸ்தர்கள், சமசமாஜிகள்) அதிகாரத்தைப் பெறுகிறதானால், முந்தமுந்த அவர்கள் புத்தகோவில்களை இடிப்பார்கள்; புத்தகுருமாரைத் துரத்திவிடுவார்கள்" என்று சென்ற 5-ந்திகதி பாணந்துறையைச் சேர்ந்த நல்லுறுவாஎனுமிடத்தில் நடந்த பெருங்கூட்டத்தில் வர்த்தகமந்திரியார் திரு. எச். அமரசூரிய அவர்கள் கூறியுள்ளனர். அதனால் அவர் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தால் சாதனை செய்யப்படும் ஜனநாயகத்தை ஆதரிக்கவேண்டுமென்றும், இடதுசாரிகளுக்குச் சமயம்என்பது இல்லையாகையால் அவர்களுக்குப் புத்தசமயத்தவர்கள் வோட் அளிப்பது பாவமாகுமென்றும் கூறினர்.

### சாராயம் விலையேறியது

சாராயத்தின்விலையைச் சென்ற 12-ந்திகதிதிங்கட்கிழமைமுதல் நமது அரசினர்இருமடங்காக்கிவிட்டிருக்கின்றனர் புதியவிலைப்படி, ஒரு போத்தல் 6 ரூபாவாக விலைப்பட்டுவந்த சாதாரணசாராயம் 12 ரூபாவாகவும், ஒரு போத்தல் 8 ரூபாவாக விலைப்பட்டுவந்த விசேஷ இனச்சாராயம் 16 ரூபாவாகவும் விலையேற்றப்பட்டிருக்கிறது. இதற்குமுன் சாராயத்தின்விலை இவ்வளவு அதிகமாக ஏற்றமடைந்ததேயில்லை.யுத்தகாலத்தில் முறையே 8 ரூபாவாகவும், 10 ரூபாவாகவும் விலைஉயர்ந்து பின்னர் 6 ரூபாவாகவும், 8 ரூபாவாகவும் விலை இறங்கியது.

### இரும்பு—உருக்குத் தொழிற்சாலை

இலங்கையிலே இரும்பு—உருக்குத் தொழிற்சாலை ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இதற்கு ஏற்படும் செலவுமதிப்பு இரண்டுகோடி ரூபாவாகும். இது ஸ்தாபிக்கப்பட்டு வேலை நடக்குமிடத்து வருடம்ஒன்றுக்கு இந்நாட்டுக்குத் தேவைப்படும் முப்பதினாயிரம் தொன் இரும்பு—உருக்குச் சாமான்களில் மூன்றில் இருபங்கையும் இத்தொழிற்சாலை உதவக்கூடியதாகும். இது ருகமத்துக்குச் சமீபமாய் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது.

### கண்டிப் பாப்பரசர்குருமடம்

கண்டியிலே, அம்பிற்றியாவில் இருந்துவருகின்ற பாப்பரசர் குருமடகட்டடங்களும், அதைச்சேர்ந்த தோட்டமும யேசுசபையாரின் அதீனத்திலிருந்து ஓ. எம். ஐ. எனப்படும் அமலோற்பவமரியநாயகி சபையாரின் ஆதீனத்துக்கு மாறியிருப்பதாகத் தெரியவருகிறது. அவற்றின் பாவனையை அமலோற்பவமரியநாயகி சபையாருக்கு மாற்றுதற்கான தீர்மானம் சபை அதிசிரேஷ்டருக்கும், றோமாபுரியிலுள்ள விசுவாசப்பரப்புதற் சபைத் தலைவருக்குமிடையே சமீபத்தில்நடந்தேறிய ஓர்மகாநாட்டில் செய்யப்படலாயிற்று. கண்டியில் இருந்து வருகின்ற பாப்பரசர் குருமடம் இந்தியா

## தலைமை ஆசிரியர் தேவை

நுவரெலி, சென் சேவியர் பாடசாலைக்கு 1952-ம் ஆண்டு தைமாத முதல் ஓர் தலைமைஆசிரியர் தேவை. மனுப்பண்ணுகிறவர்கள் ஐந்துவருடம் சேவைசெய்தவர்களாய், பயிற்சிபெற்ற முதல்வகுப்புத் தமிழ் ஆசிரியர்களாய் இருக்க வேண்டும். விபரங்களுடன் மனேஜருக்கு மனுப்பண்ணிக்கொள்க.

விலுள்ள புனாநகருக்கு மாற்றப்படவிருக்கும்சம்பவம் ஏலவே பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

### மரணசங்கதி

அச்சுவேலி உடையாராயிருந்து இளைப்பாறியிருப்பவரான ஸ்ரீ B. சின்னப்பு அவர்களின் கனிஷ்டபுதல்வரான திரு. B. S. அந்தோனிப்பிள்ளை அவர்கள் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து, கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள பிரபல டக்டர்மாராலும், பேரான, தமிழ், சிங்கள வைத்தியர்களாலும் பரிகரிக்கப்பெற்றும் குணமுறாது சென்ற 9-ந்திகதி வெள்ளிக்கிழமை காலஞ்சென்ற துயரசெய்தி அறிந்து மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்கு வயது 33. இவருடைய பிரேதசேமமானது மறுநாள் அச்சுவேலியிலே பலவிடங்களிலுமிருந்து சென்று சமுகமான குருமார், இனசனர், சிநேகிதர் திரளாகக்கூடியிருந்த சமுகத்திலே பிரலாபமத்தியில் நடந்தேறியது. இவரைஇழந்து துன்புறுகின்ற தந்தையார், மாமன்மாரான குருப்பிரசாதிகள், சகோதரர், சகோதரிகள், பாரியார், பிள்ளைகளுடனும், மற்றுமுள்ள இனசனருடனும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

### ஸ்ரீமான் ஆர். ஜே. போல் அவர்களின் தேகவியோகம்

நம்பட்டணவாசராய், பலராலும் நன்கறியப்பெற்றவராய், உத்தம கத்தோலிக்க பிரமுகராய், இந்தியாவிலே பிரபல நீதிபதியாயிருந்து இளைப்பாறியவராய், யாழ்ப்பாணம் சென் வின்சென்ற் டி போல் சபைப் பந்திகளின் தனிச்சங்க அக்கிராசனராய் விளங்கியிருந்தவரான ஸ்ரீமான் ஆர். ஜே. போல்அவர்கள் சிலகாலமாகச் சுகத்தாழ்வுற்றிருந்து சென்ற இரவு காலஞ்சென்ற துயரசெய்தியறிந்து மனவருத்தமுற்றோம்.

R. I. P.

### அரசரின் உறுதிவாக்கு

சிலமாசங்களின்முன் சதிமானமாகக் கொல்லப்பட்ட யோர்தான் நாட்டு அப்துல்லாஅரசரிடமாகச் சிம்மாசனமேறியிருக்கும் அவர்குமாரனை ரலால்அரசரைச் சமீபத்திலே ஜெருசலேமிலுள்ள லத்தீன் பத்திறியாக்குவான கோறிஅதிமேற்றிராணியார் சந்தித்தபோது, தமதுகுடும்பத்தின் பாரம்பரியங்களுக்கிணங்கத் தம்முடைய கிறீஸ்தபிரசைகள்மட்டிலே தாம்என்றைக்கும்தயைதாட்சண்யமாக நடந்துகொள்வதாக அரசர் உறுதிவாக்களித்தார். "இந்தஅரண்மனை தம்முடையதெனத் தாம் கருதவேண்டுமென நாம்ஆசிக்கிறோம்; தாம்அடிக்கடிவந்து எம்மைச்சந்தித்தால் நாம் சந்தோஷமடைவோம்; தேவனுக்குத் திருப்தியாகவும், தேசத்தின்நன்மைக்காகவும் ஆட்சிநடத்த எங்களைத் தக்கோராக்கும்படி நாம்அவரைப் பிரார்த்திக்கின்றோம்" என்றும் அரசர்கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சம்பத்திரிசியார் கல்லூரி

# 6-ம் வகுப்பிற் சேரப் பரீட்சை

சம்பத்திரிசியார் கல்லூரியில் 1952-ம் வருடத்தின் 6-ம் வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்களைத் தெரிவுசெய்வதற்காக இம்மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி துவக்கம் கல்லூரியில் ஓர் பரீட்சை நடக்கும். 1939-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதிக்குப்பின் பிறந்த எவ்வித பாடசாலை மாணவர்களும் இப்பரீட்சைக்கு வரலாம். பரீட்சை 5-ம் வகுப்புப் பாடங்களிலே நடைபெறும். தெரியப்பட்ட மாணவர்களின் பெயர்கள் மார்கழி மாதம் முடியுமுன் அறிவிக்கப்படும். அதன்பின் வேறொருவரும் 6-ம் வகுப்புக்குச் சேர்க்கப்பட மாட்டார்கள். இப்பரீட்சையைப்பற்றிய முழுவிபரம் அறிய விரும்புவோர் கல்லூரித் தலைவருக்கு எழுதவும்.

## பாடசாலைக்கோணம்

வண. சுவாமியார் அவர்களின் ஆசியிரந்து எழுதிக்கொள்வது: பலஆண்டுகளாக நான் துறவறஅந்தஸ்தில் சேரவிரும்பியும் பலதடைகளாலும் அதைப் பின்போட்டுவந்தேன். இப்போதும் அதேஎண்ணம் என்னைவிட்டு நீங்காவிட்டாலும், எனக்குத் தேவஅழைத்தல் இருக்கின்றதா, இல்லையாஎன்ற சந்தேகத்தால் கலங்குகின்றேன். இந்த வேளை தங்கள் மன்றாட்டத்தையும், ஆலோசனையையும் கோரிநிற்கின்றேன். எனக்குத் தேவஅழைத்தல் இருக்கிறதா?......

தங்கள் கீழ்ப்படிவுள்ள
ஞானப்பிள்ளை
A. M. R.

இந்தக்கேள்வி உடனுக்குடனே விடைகூறப்படக் கூடியதல்ல. தேவ அழைத்தலானது பலஅம்சங்களைக் கொண்டிருப்பதினாலும், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுவிதமான தடைகள் ஏற்படக்கூடுமென்றதினாலும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரீகளாய் வர விரும்புவோர் தாங்கள்விரும்பிய ஓர் குருவானவரிடம் தனித்தனியே பேசித் தீர்மானம்பண்ணிக் கொள்ள வேண்டியது. ஆயினும், தேவஅழைத்தலுக்குரிப பொதுவான அறிகுறிகளை ஈண்டுதருகின்றோம்.

**1. முறையான மனநிலைமை—** தேவனுக்கு ஊழியஞ்செய்வதே முக்கியநோக்கமாய், அதன்நிமித்தம் எவ்விதபாடுகளும் படுவதற்கு எப்போதுமே தயாராய் இருக்கவேண்டும். உலக மக்கள் உலகசெல்வங்களைப் பெறுதற்கு நாய்படாப்பாடுகளைப் படுவார்களானல், நாமோ அழியாத மோட்சசெல்வத்தை அடைவதற்காய் ஏன்பாடுபட இயலாது என்ற மனப்போக்கு இருக்கவேண்டும். சாகுமட்டும் சாங்கோபாங்க சீவியத்தில் வளரும்படியாக முயற்சிப்பட ஆசிக்கவேண்டும்.

**2. தான் சேரவிரும்பும் சபையின் ஒழுங்குகளை அனுசரிக்கக் கூடிய தகைமை:—** ஒவ்வோர் சந்நியாசசபையும் தன்தனக்குரிய பிரத்தியேக நோக்கத்தைக் கொண்டுள்ளமையாலே, அந்தந்தச்சபையின் கட்டுப்பாடுகளை அனுசரித்தற்கு வேண்டிய தாராதரமும், சுகபெலமும் தனக்குண்டோஎன ஆராய்ந்து பார்க்கவேண்டும். இவ்விரண்டு அடையாளங்களுமுள்ள ஒருவருக்குத் தேவஅழைத்தலும் உண்டு என்று நம்பலாம். அழைத்தலுண்டென்று காண்பவர் அவ்வழைத்தலைப் பின்பற்றுவதற்குத் திருச்சபையில் இருந்துவரும் சந்நியாசசபைகளுள் ஒன்றில் சேரவேண்டும்.

**3. சபையின் சிரேஷ்டர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவது:—** மேற்கூறிய இரண்டு அறிகுறிகளுமுள்ள ஒருவர், குறித்த ஓர் சந்நியாச சபையின் சிரேஷ்டர்களால் ஏற்றுப் பரிசோதிக்கப்பட்டபின், அச்சபைக்குரிய வாக்குத்தத்தங்களைப் பண்ணும்படி அழைக்கப்படும்போது, அவருடைய தேவஅழைத்தலுக்குரிய பிரசித்த அடையாளமொன்றைக் கண்டுகொள்ளுகின்றோம்.

B. E. A.

புத்தக மதிப்புரை

## "இலக்கியப் பொழில்"

ஆசிரியர்: எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ., தமிழ்ப் பேராசிரியர், சென் ஜோசப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. பிரசுரம்: ஒற்றுமைநிலையம், நெ. 8, வியாசராவ்தெரு, தியாகராயநகர், சென்னை 17. 140 பக்கம் கொண்டது. விலை பிரதி ரூபா $1\frac{1}{2}$. ஆசிரியரிடமும், ஒற்றுமைஆபீஸ் அச்சகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தஅரியநூல் தமிழ்ப்பூம்பொழிலில் ஆய்ந்தெடுத்து அழகும், வளமும், நறுமணமும் பொருந்த ஆக்கப்பெற்றுள்ள ஓர்இலக்கியக் களஞ்சியமாகும். சிலப்பதிகாரம் என்ற பைந்தமிழ்ப் பெருங்காப்பியத்தைப் பாங்குற அருளிய இளங்கோவடிகள், இளம்பூரணர் என்னும் புகழ்வாய்ந்த இயற்றமிழ் ஆசிரியர், காவியச்சுவை கனிந்துவிளங்கும் இராமாயணத்தை யாத்தருளிய கம்பர், தமிழ்நாட்டிற்குவந்து கிறிஸ்து பெருமானின் அருட்சமயத் தொண்டோடு அருந்தமிழ்த் தொண்டுசெய்து மங்காப்புகழ்படைத்த வீரமாமுனிவர், சுப்பிரதீபக் கவிராயர்முதலாம் கவிஞர்களின் இன்பக்கவிமலர்கள் இதிலே நறுமணங் கமழ்கின்றன. இதற்குச் சொல்லின்செல்வன் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் அளித்துள்ள அணிந்துரையிலே "சங்கத்தமிழிலும், பிற்காலத்தமிழிலும்உள்ள சிறந்த சொல்லோவியங்கள் இலங்குகின்றன; ஆடரங்கம்முதலிய அழகிய கலைக்கோயில்கள் அணிசெய்கின்றன" என இதன் சிறப்பை எடுத்துக்காட்டியிருக்கின்றார். சிறந்ததமிழறிஞரும், ஆர்வமிக்க தமிழ்த்தொண்டருமான இந்நூலாசிரியர் தமிழகத்துக்கு ஓர்இலக்கியவிருந்தாக அளித்துள்ள இந்த இலக்கியப் பொழிலைத் தமிழபிமானிகள் சகலரும் பெருமகிழ்வுடன் ஆதரிப்பார்களென நம்புகின்றேம். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

## உத்தரிப்பு ஸ்தல யாத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றெல்லாம் உங்கள்ஒவ்வொருவரது உள்ளத்திலும் பலவித உணர்ச்சிஅலைகள் எழுகின்றனவே.

உங்கள் இந்தமுதல்யாத்திரை பலன்அளிப்பதாக! உத்தரிப்பு ஸ்தலத்து அந்தரித்த ஆத்துமாக்களுக்கு நித்தியஇளைப்பாற்றியை அருள்வதாக!

[அடுத்தமுறை இரண்டாவது யாத்திரை]



### செகமீட்பராகிய திவ்விய பாலனின்

# நவதின உற்சவம்

ஆசா. கபிரியேல் பச்சேக்கு சுவாமிகளால்
இயற்றப்பட்டது.

நல்லூர், ஞானப்பிரகாச சுவாமிகளால்
1906-ம் ஆண்டு புதுக்கி அச்சிடப்பெற்றது.

நாற்பத்துநான்கு வருடங்களின்பின்
இப்போது 2-ம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது.

நத்தால் திருநாளைப் பூச்சிய பயபத்தியுடன்
கொண்டாட உதவியான
நோவனைத் தியானங்களும், செபங்களும்
திவ்வியபாலனின் பிறப்பைச்சார்ந்த ஆசைகள்,
புகழ்ச்சிகள், பிரார்த்தனைகளும் அடங்கியது.

— விலை 75 சதம் —

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை

## சம்பத்திரிசியார் கல்லூரி

# கீழ்ப்பாடசாலை 1952.

மேற்படி கல்லூரியின் கீழ்ப்பாடசாலையில் 1952-ம் ஆண்டு 5-ம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகள், 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ந் திகதி சனிக்கிழமை நடக்கவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் பங்குபற்றவேண்டும்.

1952-ம் ஆண்டு 4-ம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகள், 1952-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி சனிக்கிழமை நடக்கவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் பங்குபற்றவேண்டும்.

இந்தப் பிரவேசப் பரீட்சைக்கு உரிய மற்றும் நிபந்தனைகளை அறிய விரும்புகிறவர்கள் கீழ்ப்பாடசாலையின் வண. தலைவர் சுவாமியாருக்கு நேரகாலத்துடன் மனுப்பண்ணி உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

## இளைஞர் விவசாயக் கழகம்

வவுனியா, நொச்சிக்குளம் கத்தோலிக்கபாடசாலை இளைஞர் விவசாயக் கழகம் 2-11-51 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குக்கூடிப் பாடசாலை அருகாமையிலுள்ள நொச்சிக்குளவயலிலே கழகநோக்கங்களில் ஒன்றாகிய நாற்றுநடுகையை ஆரம்பித்தது. இப்பகுதிப் பாடசாலைகளிலே கூட்டப்பட்ட கழகங்களில் இப்பாடசாலைக் கழகமே முதன்முறையாகவும், முன்னோடியாகவும் தனது வேலையைத் தொடங்கியது. வவுனியாக் கச்சேரி O. A. திரு. செல்வரத்தினம் அவர்களினதும், பாரியாரினதும் தலைமையில் முந்தச்செபத்துடனும் பின்னர், நாட்டுப்பாடலுடனும் நாற்றுநடுகை ஆரம்பமானது. இப்பவனியைப்பார்ப்பதற்குப் பிள்ளைகளின் பெற்றோர் தம்பனைக்குளம், நேரியகுளம், நொச்சிக்குளம், அடப்பன்குளம், மாங்குளம், இலுப்பைக்குளம், வேப்பங்குளம் எனுமிடங்களிலிருந்து வந்தனர். கமத்தொழிற்போதகர், கிராமமுன்னேற்ற சங்கபோதகர், கமத்தொழில் கிராம ஓவர்சியர்என்போர் நடுகைமாதிரிகளை விளக்கினர். இவர்கள்யாவரும் சேர்ந்த புகைப்படம்ஒன்றும் பிடிக்கப்பட்டது. இதனை ஆக்கிவைத்த கமத்தொழிற்போதகர் திரு. எஸ். காராளசிங்கம்அவர்கட்கும், தலைமைஆசிரியர் திரு. ஏ. லிகோரி சின்னப்பு அவர்கட்கும் எமதுநன்றி உரித்தாகுக. கிராமவாசிகள் இவர்களைப் பின்பற்றுவார்களாக!

ம. ஞானவாசகம்
காரியதரிசி

## நன்றியறிந்த ஸ்தோத்திரம

கிறீஸ்து இராசாவின் இரக்கத்தாலும் பரிசுத்த பாத்திமாநாயகி, பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பர், வறியவர்களின் உபகாரியாகிய அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். பிலோமினம்மாள் இவர்களின் மன்றாட்டாலும் எங்களுக்கு நேரிட்டவிக்கினங்கள் நீங்கப்பெற்றன. கிறீஸ்து இராசாவின் இரக்கமும்தேவதாயாரினதும்சகலஅர்ச்சியசிஷ்டர்களினதும் மன்றாட்டமும் என்றென்றும் எங்கள்மேல் இருப்பதாக.

ஊறணி. M. C.

யேசுவின் திருஇரக்கத்தினாலும் பரிசுத்த செபமாலை மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். றீத்தம்மாள், அர்ச். சந்தியோகுமையோர், அர்ச். அந்தோனியார், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். யூதாததேயும் அர்ச். பிலோமினம்மாள் இவர்களின்வேண்டுதலினால் நான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானபடியால் இதைப்பத்திரிகையில் பிரசுரஞ் செய்கிறேன். D. M.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேத விஞவிடை

## —VII—

### ஆவியானவர் எங்களே இணைப்பவர்

### (4) திருச்சபையின் வழுவாவரம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

79. அப்போஸ்தலர்கள் கையளித்த பாரம்பரியம் நம்மிடத்தில் எப்படி வந்துசேருகிறது?

அப்போஸ்தலர்களின் சிஷர்களும் இந்தச்சிஷர்களால் அப்போஸ்தலர்களின் போதனையையறிந்த திருச்சபைப் பிதாக்களும் அதைப்பற்றி விடுத்த எழுத்துகள்மூலமாயும், அப்போஸ்தலர்காலந்தொட்டுத் தலைமுறை தலைமுறையாகவந்து திருச்சபையில் வழங்கும் விசுவாசத்துக்கு அடுத்த அநுசாணைகள்மூலமாயும், இந்தஎழுத்துக்கள் அநுசாணைகளிலிருந்து அப்போஸ்தலர்களின் போதனையை ஆராய்ந்து திருச்சபையின் தலைவரும், பொதுச்சங்கங்களும் நிரூபிக்கிற விசுவாசப்பிரமாணங்கள்மூலமாயும் வந்து சேருகிறது.

80. அப்போஸ்தலர்கள் கையளித்த வேதாகமம் நம்மிடத்தில் எப்படி வந்து சேருகிறது?

முதல் அப்போஸ்தலர்கள் வாய்மொழியால் இன்னஇன்ன வேதபுத்தகங்கள்தான் பரிசுத்தஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டபடியால் வேதாகமத்துக்குச் சேர்ந்தவைஎன்று தங்கள் சிஷர்களுக்குப் போதித்தார்கள். பின்பு அந்தப்போதனை அப்போஸ்தலர்காலந்தொட்டுத் தலைமுறைதலைமுறையாகத் திருச்சபையில் வழங்கிவந்தது. கடைசியாய், திருச்சபையின் அதிகாரிகள் அப்படிவழங்கிவந்த போதனையைத் தெளிவாகநிரூபித்து, வேதபுத்தகங்கள் மாற்றமில்லாமல் நம்மிடம் வந்துசேரும்படி காவலாயிருக்கிறார்கள்.

81. ஆகையால் வேதாகமம் திருச்சபையிலே தங்கியிருக்கின்றதா?

வேதாகமத்தைப் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட புத்தகமாகப் பார்த்தால், அது திருச்சபையில் தங்கியிருக்கின்றது; ஏனெனில் திருச்சபையின் அதிகாரத்தைக்கொண்டே அதை அப்படிப்பட்ட புத்தகம்என்று எண்பிக்கலாம். ஆனால் வேதாகமத்தை உண்மையான சரித்திரமாகமாத்திரம் பார்த்தால், அதிலே திருச்சபை தங்கியிருக்கின்றது; ஏனெனில் அது திருச்சபையின் தேவஅதிகாரத்தை ஒப்பிக்க உதவுகின்றது.

82. விசுவாசப் பொக்கிஷத்தின் மேல் திருச்சபைக்கு என்ன அதிகாரம் உண்டு?

அதில்அடங்கியிருக்கிற வேத சத்தியங்களைப் பிழையில்லாமல் காப்பாற்றவும், அவைகளின்கருத்தைத் தெளிவாக வரையறுத்து வசனிக்கவும், அவைகளோடு சமபந்தமானவைகளை அங்கீகரிக்கவும் அதிகாரம் உண்டு.

"உம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்டதை நீர் காத்துக்கொண்டு, நூதனமான இலௌகிக வாக்கியங்களையும், கல்வியென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற விபரீத ஞானங்களையும் விலக்குவீராக" —1 தி. VI. 20.

"வேதப்பிரமாணத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனத்துக்கும் அவனவன் தானே வியாக்கியானஞ் செய்யத்தக்கதல்ல" — 2 இரா. I. 20.

83. எந்தத் தருணங்களில் திருச்சபை வழுவாவரமுள்ளது?

1-வது திருச்சபையின் தலைவராகிய பாப்பானவர் விசுவாசப் பொக்ஷத்திலிருந்து ஒருவேதசத்தியத்தை எடுத்து வரையறுத்துவசனித்து முழுத்திருச்சபையாலும் அங்கீகரிக்கப்படவேணுமென்று கற்பிக்கும்போதும்,

2-வது பாப்பானவரோடு ஒன்றித்திருக்கும் சகலமேற்றிராணிமார்களும் தங்கள் சாதாரண போதனையிலோ, பொதுச்சங்கத்தில் கூடி ஒருவேதசத்தியத்தை அங்கீகரிக்க வேணுமென்று வசனிப்பதிலோ இணங்கும்போதும்,

3-வது சகல விசுவாசிகளும் ஒற்றுமையாயும், நிச்சயமாயும், தெளிவாயும் ஒருவேதசத்தியத்தைச் சருவேசுரனால் வெளிப்படுத்தப்பட்டதென்று அங்கீகரித்திருக்கும்போதும் திருச்சபை வழுவாவரமுள்ளது.

"சீமோனே, உன்விசுவாசம் தளராதபடி உனக்காக வேண்டிக்கொண்டேன். உன்சகோதரரை உறுதிப்படுத்து"—லூக். XXII. 32.

"மற்றொருபாரத்தையும் உங்கள்மேல் சுமத்தப்படாதென்று இஸ்பிரீத்துசாந்துவுக்கும் எங்களுக்கும் நலமாகத் தோன்றிற்று"— அப். XV. 28.

"நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது"—மத். XVI. 18.

"இதோ நான் உலகமுடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேன்"—மத். XXVIII. 20.

84. மேற்சொல்லப்பட்ட மூன்று தருணங்களில் என்கிலும் திருச்சபை தவறாமல்இருப்பது அவசியமா?

ஆம். ஏனெனில் யேசுநாதர் நாம் இரட்சணியமடைவதற்குத் தவறுள்ள திருச்சபைக்கு அமைய வேண்டுமென்று கற்பித்திருக்கமாட்டார். மேலும் திருச்சபை தவறுள்ளதென்றால், இவ்வுலகில் இரட்சணிய வழியைப்பற்றி ஒருவரும் நிச்சயமாயிருக்க முடியாது.

85. ரோமான்திருச்சபைமாத்திரம் வழுவாவரமுள்ளதா?

ஆம். ஏனெனில் அதுமாத்திரம் அப்போஸ்தலத்துவத்தையும், பரிசுத்ததனத்தையும், கத்தோலிக்கு ஏகத்துவத்தையும் உடையது. மேலும் வழுவாவரத்துக்கு உரிமைபாராட்டுகிறதும், ஒருகாலத்தில் படிப்பித்த போதனைக்கு எதிராக வேறொருகாலத்தில் படிப்பியாமலிருப்பதும் அந்தத் திருச்சபைமாத்திரமே.

## பூசைக்குச் சென்ற ஏழைச் சிறுவன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுள். அவ்வீட்டிலே எவ்விடத்திலும் வறுமையின் சின்னங்களே நிறைந்து காணப்பட்டன. அருள்மரி ஜோனை அறிந்துகொண்ட வாயிலாகத் தன்னை அறிமுகப்படுத்தினாள். தனக்குச் சிறு குற்றேவல்புரிய ஜோண் தேவையென்றும், பகல்போசனமும், வாரத்துக்கு நாலு ரூபாவும்கொடுத்து ஒன்பது மணிக்கெல்லாம்அவனைப்பாடசாலைக்கு அனுப்பிவைப்பதாகவும் கூறினாள். உணவு நெருக்கடியான இக்காலத்தில் யார்தான் இதற்குச் சம்மதியார்? தாய் அருள்மரியின் வேண்டுகோளுக்கு மனப்பூர்வமாக இசைந்தாள்.

மறுவாரம்பூசையில் ஜோண் ஒழுங்காகத் தலைமயிர் வாரிவிடப்பட்டு அழகியஉடையில் மிகுந்தபொலிவுடன் விளங்குவதை அருள்மரி பார்த்து மிகவும் ஆனந்தித்தாள். அத்தோடு அன்று மாலை பாடசாலை விளையாட்டுக் கழகத்தில் தான் சேர்ந்திருப்பதாக ஜோண்தெரிவித்தான். செபங்கள், தன் அரியபெரிய கவிதைகள் மூலமாகத்தான் அடைந்திராத ஓர்வித புதுமகிழ்ச்சி தன்உள்ளத்தில் பொங்கிவருவதை அருள்மரி உணர்ந்தாள்.

இப்போதுதான் அருள்மரி பிறரோடு நெருங்கிப் பழகாமல் [illegible] தது எவ்வளவு மதியீனம் என்பதை அறிந்து தன்காலத்தை வீணாக்கினதற்காகப் பெரிதும்வருந்தினாள். அதற்குப் பரிகாரமாக அவ்வூரிலுள்ள ஜோணைப்போலொத்த இனனும் பலசிறுவரை முன்னணியில் கொண்டுவருவதில் ஈடுபட்டாள்.

(ச. ஞா. தூ.)

## பிரியாவிடைவைபவம்

சென்ற நாலரை ஆண்டளவாக மண்டைதீவு—அல்லைப்பிட்டி விசாரணைப்பங்குக் கட்டளைக்குருவாய் இருந்த வண. எல். யோசேப்சுவாமியவர்கள் தாழையடிக்கு மாற்றப்பட்டிருப்பதை அறியவந்த அல்லைப்பிட்டிவாசிகள் இம்மதி 10-திகதி சனிவாரம் சாயந்தரம் 4-மணியளவில் அவருக்கு ஓர் பிரியாவிடைவிழா நிகழ்த்தினர். அவரைக் குருமனையிலிருந்து வாத்தியவரிசைகளுடன் மாலைசூட்டி அழைத்துச்சென்று சிங்காரிக்கப்பெற்றிருந்த பாடசாலைமண்டபத்தை அடைந்ததும், பிரியாவிடைநாயகரை நடுவிடமாகக் கொண்டு வண. எஸ். நீக்கிலாப்பிள்ளை சுவாமியாரும், வண. எஸ். கருணைகார் சுவாமியாரும் வலமிடமாக அமர்ந்திருக்க, மூன்றுகோவில்களின் மூப்புமாரும் தனித்தனியே மாலைகள் சூட்டினர். அவர்களைத்தொடர்ந்து மற்றுஞ்சிலராலும், சைவநண்பர்களாலும் அநேகமாலைகள் சூட்டப்பட்டன.

பின்னர் பரிசுத்த கார்மேல்உத்தரியமாதாகோவில் மக்கள்போரால் திரு. பி. ரி. சந்தியாப்பிள்ளையும், அர்ச். யுவானியார்கோவில் மக்கள்சார்பாக திரு. மோ. அவுறும்பிள்ளையும், பாடசாலை மாணவர்போரால் நீ. தேவதாசனும் ஒவ்வோர் பிரியாவிடைப்பத்திரம் தனித்தனியே படித்துக் கொடுத்தார்கள். பலர் அன்பளிப்புகள் வழங்கினர். பாடசாலைச்சிறுமிகளால் சிறந்தநடனங்கள் நடத்திச் செவிக்கினிய இசைவிருந்தும் அளிக்கப்பட்டது. அதன்மேல் திரு. பி. ரி. எஸ். பிள்ளைஅவர்கள் சுவாமியாரின் ஞானத்தொண்டையும், சமூகசேவையையும் பாராட்டி, அவர்காலத்தில் பலவிததிருத்தமும், முன்னேற்றமும் ஏற்பட்டிருப்பதை எடுத்துக்காட்டி ஓர்சொற்பொழிவாற்றினர். அவரைத் தொடர்ந்து ஆசிரியர் அ. ம. யோசேப்புஅவர்களும், சைவமக்கள்சார்பாக திரு. ஆர். சிவகுருஅவர்களும், கார்மேல்மாதாகோவில் மூப்பர் ஜே. பி. பொன்னுத்துரை அவர்களும் சுவாமியாரின் ஊக்கமானஉழைப்பையும், உந்தலட்சியங்களையும் எடுத்துக்காட்டி உணர்ச்சிததும்பப்பேசினர்கள்.

ஈற்றில் சுவாமியார்எழுந்து தமக்குச்செய்யப்பட்ட உபசாரங்களுக்காகவும், சொல்லப்பட்ட வாழ்த்துகளுக்காகவும் நன்றித்துதிகூறித் தமதுஆசீர் ஈந்தனர். பின்னர் ஓர்சிற்றுண்டிஉபசரணைநடந்து விழா இனிதே நிறைவேறியது. — நிருபர்

## மாதோட்டத்தபால்

(நாட்டுத்தூதன்)

மன்னார்ப்பகுதிக் கிராமச்சங்கங்களின் தலைவர்கள்மகாநாடு சென்ற 30-ந்திகதி மன்னார், அர்ச். சவேரியார் கல்லூரிமண்டபத்திலே தலதாபன உபஅதிபர் திரு. எஸ். ஏ. யோசெவ் அவர்கள்தலைமையில் நடைபெற்று, அதற்கும் தலைவர்ஒருவரைத் தெரிவுசெய்யும்விஷயமாய்ப் போட்டியேற்பட்டதாம். கடைசியாக நானாட்டான்மேற்குக் கி. ச. தலைவர் திரு. கே. எம். மனுவேற்பிள்ளை அதற்குத் தலைவராகவும், வங்காலைக் கி. ச. தலைவர் திரு. எவ். சூசைப்புக்குரூஸ் உபதலைவராகவும் தெரியப்பெற்றனராம். ஏதோ [illegible] பெறவேண்டியது தானும். இப்போதுஇங்கே எத்திசை நோக்கினும் வானொலித்தொனியே கேட்கின்றதாம். இதற்கெல்லாம் மூலகாரணம் மந்திரியார் சிற்றம்பலம் அவர்கள்தானும். பலநவீனங்களும் காணப்படுவது சந்தோஷமேயானாலும் பாரம்பரியமான சிலநற்பழக்கவழக்கங்கள் கைநெகிழப்படுவது கவலையைத்தருவதாகின்றது.

மரணதண்டனை—சென்ற ஆடி மாசம் 6-ந்திகதி அடம்பன்–நெடுங்கண்டல் கடைவீதியில் சந்தனம்என்னும் வாலிபனைச் செய்யதுஎன்ற இந்திய முஸ்லீம் குற்றிக்கொலைசெய்தானென்று தொடரப்பட்டிருந்தவழக்கு யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டில் விசாரணைக்குள்ளாய் எதிரி கொலைக்குற்றவாளியாகி மரணதண்டனைவிதிக்கப்பட்டனன். இம்மரணதண்டனை மார்கழிமாதம் 21-ந்திகதி நிறைவேற்றப்படுமெனத் தெரியவருகிறது.

கர்த்தர்கோயில்—பரப்புக்கடந்தானிலே திவ்வியகர்த்தர்போரால் இருந்துவருகின்ற சிற்றாலயம் தபசுகாலத்து ஆறும்வெள்ளியன்றும், மருதமடுத் திருப்பதியின் ஆடி, ஆவணி மகோற்சவகாலங்களிலும் ஓர்சிறு யாத்திரைத்தலம்போல் காட்சியளித்துவருகிறது. இந்தப் புனிததலத்தில் இதுகாலவரை ஓர்நல்ல குடிதண்ணீர்க்கிணறு இல்லாதிருந்தமை யாத்திரிகருக்குப் பெரிய கஷ்டத்தைத் தருவதாயிற்று. அன்றியும் குளத்துநீரைப்பருகித் தங்கள் சுகத்தையும் அவர்கள்கெடுத்துக் கொள்ளக்கூடி நிலைமை இருந்துவரலாயிற்று. ஆனால், இப்பெருங்குறைபாடு வண. எஸ். வேந்தர்கோன்சுவாமிகளின் பெரும்முயற்சியால் நவமாகத் தோண்டப்பெற்ற நல்லதண்ணீர்க்கிணற்றால் இப்போது நிவிர்த்தியாகியிருக்கிறது.

திருமணம்—பெரியநாவற்குள வாசரும், வங்காலை ஆண்பாடசாலை ஆசிரியருமான திரு. பி. பெர்னாண்டோஅவர்களின் கனிஷ்டபுத்திரியும், பாலையடிப் புதுக்குளம் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் பி. ஞானப்பிரகாசம் அவர்களின் சகோதரியுமான செல்வி ஞானப்பூ யோகம்மாவிற்கும், அவ்வூர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளையின்புத்திரன் செல்வன் சூசைப்பிள்ளை இராசசிங்கத்திற்கும் சென்ற 24-ந்திகதி அர்ச். மரியமாதாகோயிலிலே வண. எஸ். வேந்தர்கோன் சுவாமிகளால் திருமணவைபவம் சம்பிரமமாக நிறைவேறியது. இப்புதியகுடும்பம் சகல செல்வங்களையும்பெற்றுப் பல்லாண்டு வாழ்க!

ஞானஒடுக்கம்—யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த கத்தோலிக்க தமிழ்ஆசிரியர்களின் வருடாந்த முதலாவது ஞானஒடுக்கம் வழமைபோல் மருதமடுத்திருப்பதியிலே சென்ற24-ந்திகதிமுதல் 28-ந்திகதிவரையும் அமைதியாக நடைபெறலாயிற்று. இதன் போதகரான வண. பிலிப் பொன்னையா சுவாமிகளின் சிறந்த பிரசங்கங்கள் என்றும் மறக்கக்கூடியனஅன்று. 85 ஆசிரியர்கள்வரை ஞானஒடுக்கத்தில் கலந்துகொண்டனர். எமது மேற்றிராணிஆண்டவரும், கத்தோலிக்கபாடசாலைகளின் பிரதமமுகாமைக்கார சுவாமிகளும் சமுகந்தந்து ஊட்டிய நன்மதிகள் போற்றற்பாலனவாகும். கடைசியாக மாதாசுரூப சுற்றுப்பிரகாரத்துடன் ஞானஒடுக்கம் முடிவடைந்தது. ஞானத்தியானத்திற்கு மருதமடுத்திருப்பதியைப்போன்ற வாய்ப்பானதலம் பிறிதொன்றில்லையென்போம். சுபம்.

— ஜேர்மனியிலுள்ள அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், குருமார் ஒவ்வொருவரும் தங்கள்சம்பளத்தில் நூற்றுக்கு 3 விகிதம் உள்நாட்டு மிஷன்களுக்கென உபகரிக்கின்றார்கள். ஜேர்மனியகத்தோலிக்கர் வருடம்ஒன்றுக்கு விசுவாசப்பரப்புதற் சபைக்கென 5 லட்சத்து 50 ஆயிரம்பவுண் வரையில் கொடுத்துவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணாவின் செய்தி

அன்பார்ந்த சகோதரங்களே!

நாம் இருக்கும் நாட்டிலே நல்ல மழை. உங்கள் நாட்டிலும் அப்படியே இருக்கும் என்று எண்ணுகிறேன். உங்களிற் சிலர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறீர்கள். கதையும், பாட்டும் வந்தன. சந்தோஷம். அவைகளைப் பற்றிச் சில குறிப்புகள்.

1. சிறுகதை, பாட்டு, கவிதை, கட்டுரை எழுதுங்கள். பாட்டுக்கு இராகம், தாளம் குறிக்கவும். தொடர்கதை விரும்பத்தக்கதல்ல.

2. விஷயம் உங்களுடையதாய் இருக்க வேண்டும். பிற பத்திரிகை, புத்தகங்களைப் பார்த்துக் கொப்பி அடிக்க வேண்டாம்.

3. விஷயம் காகிதத்தின் ஒரு பக்கத்தில், மையால், தெளிவான எழுத்தில் எழுதப்பட வேண்டும்.

4. உங்கள் பெயர், வகுப்பு, வயது ஆகியன குறிக்கப்பட வேண்டும்.

5. பாடசாலைத் தலைமை ஆசிரியரின் கைச்சாத்துடன் அனுப்ப வேண்டும். இந்த ஒழுங்குகளை அனுசரித்தால் எல்லாரும் "பாலர் பக்க"த்தைச் சிறப்பிக்கலாம். சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## தாத்தா சொன்னகதை

தாத்தா பத்திரிகை வாசித்துக் கொண்டு இருக்கிறார். வெளியே நல்ல மழை பெய்கிறது. பேரப்பிள்ளைகள் அருகே வருகிறார்கள்.

**இராணி :**— என்ன தாத்தா! ஒரு கதை சொல்லுங்களேன். உங்கள் கதை என்றால் எனக்கு ரொம்ப ஆசை தாத்தா.

**தாத்தா :**— நான் இப்போ பேப்பர் வாசிக்க வேண்டும். என்னைக் குழப்பாது போய் விளையாடுங்கள்.

**அருள் :**— மழை பெய்கிறதே தாத்தா. எப்படி விளையாடுகிறது? ஒரு கதை, ஒரு சின்னக் கதை சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா :**— என்னைச் சும்மா விடமாட்டீர்கள் போல்இருக்கிறதே. சரி, இப்படி உட்காருங்கள்.

**இருவரும் :**— நல்ல தாத்தா. நல்ல கதையாய்ச் சொல்லுங்க தாத்தா.

**தாத்தா :**— சரி, என்னுடைய கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அப்போது எனக்கு வயது பதினைந்து. இன்றுபோல் அன்றும் நல்ல மழை. தெரு எங்கும் சேறும், சகதியுமாக இருந்தது. மழை நின்றதும் பாடசாலையில் இருந்து வீட்டை நோக்கி ஓடிவந்தேன். தற்செயலாக நடுவழியில் சறுக்கி விழுந்தேன்.

**இராணி :**— ஐயோ! நீங்களா தாத்தா விழுந்தது?

**தாத்தா :**— ஆம். ஏன்? நான் என்றால் விழக் கூடாதா? உலகில் எத்தனை பேர் எத்தனை காரியங்களில் சறுக்கி விழுகிறார்கள்!

**அருள் :**— சரி தாத்தா. அப்பால் என்ன நடந்தது? சொல்லுங்கோ.

**தாத்தா :**— அப்பால் என்ன! விழுந்த இடத்தில் இருந்து எழும்ப முடியவில்லை. நாரியில் நல்ல நோவு. கையை நிலத்தில் ஊன்றிக் கொண்டு முக்கி முனகிப் பார்த்தேன் முடியவில்லை.

**இராணி :**— என்ன தாத்தா? அவ்வளவு கஷ்டப் பட்டீர்களா? அப்போது வழியால் ஒருவரும் வரவில்லையா?

**தாத்தா :**— ஏன் வரவில்லை. சிறிது நேரத்தால் இருவர் அவ்வழியே வந்தனர். அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்து விட்டுப் போனார்கள். பின்பு ஒருவர் வந்தார். அவரைப்பார்த்து எனக்கு உதவிசெய்யும்படி கேட்டேன். அவர் கேட்டும் கேளாதது போல் சென்றுவிட்டார்.

**அருள் :**— என்ன தாத்தா! அவ்வளவு இரக்கம் இல்லாதவர்களா அவர்கள்? மனிதன் என்றால் இப்படியா இருப்பது தாத்தா? நான் என்றால் உடனே ஓடி வந்து உங்களைத் தூக்கி இருப்பேனே.

**தாத்தா :**— என்ன செய்யலாம் அருள். நீ அப்போது பிறக்கவில்லை. அப்படியும் மனிதர் உண்டு தான். என்றாலும் பின்பு ஒருவர் அவ்வழியே வந்தார். அவர் என் அருகே வந்து என்னை விசாரித்துத் தூக்கி விட்டார். என்னுடைய நிலைமையைக் கண்டு இரங்கித் தன் செலவில் என்னை ஒரு வண்டியில் ஏற்றி ஒரு வைத்தியரிடம் கொண்டு சென்று எனது நோவிற்கு மருந்து போடுவித்தார். பின்பு என் வீட்டிலும் என்னைக் கொண்டு வந்து விட்டுப் போனார்.

**இராணி :**— அவர் எவ்வளவு நல்லவர் தாத்தா. அவர் அல்லவோ மனிதன். அவர் நல்லாயிருக்க வேணும் தாத்தா.

**தாத்தா :**— ஆம், இராணி. அப்படியே நாமும் இருக்க வேண்டும். அவரைப் போல் நாமும் செய்ய எங்கள் திரு வேதம் ஒரு தருணம் நமக்குத் தந்திருக்கிறது.

**இருவரும் :**— அது என்ன தாத்தா?

**தாத்தா :**— இது கார்த்திகை மாசம் அல்லவா? இந்த மாசம் ஆருடைய மாதம் என்று உங்களுக்குத் தெரியுமா?

**இருவரும் :**— ஆம் தாத்தா. இது ஆத்துமாக்களின் மாசம் தாத்தா.

**தாத்தா :**— ஆம். உத்தரிப்புஸ்தலத்தில் இருக்கிற ஆத்துமாக்கள் எல்லாம் மோட்ச வீட்டிற்குப் போகும் பாதையில் சறுக்கி விழுந்தவர்கள் தான். அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். நாங்கள்தான் கைகொடுத்து அவர்களைத் தூக்கி விட வேண்டும.

**இராணி :**— எங்கே தாத்தா. அவர்களைக் காட்டுங்கள். நானும், அண்ணாவும் இப்பொழுதே போய் அவர்களுக்கு உதவி செய்கிறோம்.

**தாத்தா :** ஆக்கா! நல்ல கெட்டிக்காரி. நாங்கள் அவர்களைக் காணவும் முடியாது. அவர்கள் இருக்கும் இடத்துக்கு இப்போது போகவும் முடியாது. ஆனால், அவர்கள் "பூவுலக வாசிகளே, எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று கேட்கிறார்கள்.

**அருள் :**— அப்படி என்றால் நாங்கள் எப்படித் தாத்தா அவர்களுக்கு உதவி செய்யலாம்?

**தாத்தா :**— அப்படிக் கேள் தம்பி! அவர்களுக்கு உதவி செய்ய அநேக வழிகள் உள்ளன. சில சொல்லுகிறேன் கேளுங்கள். ஒவ்வொரு நாளும் பூசை கண்டு ஒப்புக் கொடுக்கலாம். அவர்களுக்காகச் செபம் செய்யலாம். சொல்லும் செபமாலையை ஒப்புக் கொடுக்கலாம். சிறிது குறைத்துச் சாப்பிடுதல், கோபத்தை அடக்குதல், ஏழைகளுக்கு உதவுதல், விளையாட்டைக் குறைத்தல் முதலாம் சிறு சிறு ஒறுத்தல்களைச் செய்யலாம். பொதுவாக நாங்கள் என்ன செய்தாலும் அவர்களுக்காகச் செய்கிறோம் என்ற எண்ணம் இருந்தால் போதும். எங்களால் மோட்சம் போகும் ஆத்துமாக்கள் தேவனிடம் எங்களுக்காக மன்றாடிப் பல நன்மைகளைப் பெற்றுத் தருவார்கள்.

**இருவரும் :**— இது தானா தாத்தா. இப்படி என்றால் நாங்கள் கட்டாயம் எல்லா ஆத்துமாக்களும் மோட்ச வீட்டுள் போகச் செய்வோமே.

**தாத்தா :**— நல்லது. உங்கள் கெட்டித்தனத்தைப் பார்ப்போம்.



## சின்னக்குழந்தை

1

ஆட்டுக் குட்டியைப் போல்—நான்
அங்கும் இங்குமாய்த் தொங்கித்
துள்ளுவன்
பாட்டின் இன்னிசை போல்—எந்தப்
பஞ்சம் பிணியிலும் கொஞ்சும்
குழந்தை நான்
வீட்டின் உயிர் மருந்து—எந்த
வேளையும் இன்பத்தில் ஆளை
மயக்குவேன்
கோட்டுக் கட்டளை போல்—தொட்டில்
கூட்டிலே போட்டென்னை ஆட்டுதல்
வேண்டாமே.

2

சின்னச் சிரிப் பினிலே—எந்தன்
சிங்கார மானஓர் அங்க அசைப்
பிலே
அன்ன நடை யினிலே—ஓடி
ஆடையிலே விழுந் தோடையிலே
நல்ல
கன்னித் தமி ழினிலே—ஏடு
காணாத சொற்களின் வீணைச்
சுவையிலே
கன்னக் குழி யினிலே—வடியும்
கண்ணீரிலே இன்பங் காட்டுவேன்
வீட்டிலே.

—அழகு

## பிறர்க்கிடுபள்ளம் தான்விழும்பள்ளம்

ஞானசேகரன் ஒரு கிராம அதிகாரி. அவன் பெயர் ஞான சேகரனே தவிர அவனிடம் ஞானம் என்பதே இல்லை. அவனுக்குப் பணத்தில் அதிக ஆசை. "செல்வம் வந்துற்ற காலை தெய்வமும் சிறிது பேணார்" என்பதுபோல, அவன் கடவுளை வழிபட்டு அறியான். ஞாயிற்றுக் கிழமை கூடக் கோவிலுக்குப் போக மாட்டான். அவன் மனைவியும், அவன் குணத்திற்கு ஏற்றவளே. ஊராரின் பணத்தைக் கொள்ளை அடிப்பதே சேகரனின் முக்கிய தொழில்.

யேசுதாசன் இவர்களின் ஒரே மகன். சேற்றிலே செந்தாமரை முளைக்கிறது அல்லவா? அப்படித் தோன்றியவன் தான் இவனும். நல்ல அறிவு உடையவன். சிறந்த கடவுள் பத்தி உள்ளவன். அதனால் நாட்டு மக்கள் இவனிடம் நல்ல அன்பு கொண்டனர். இவனுக்காகவே இவன் தந்தையின் கொடுமைகளைப் பொறுத்தனர்.

ஒருநாள் அந்நிய வியாபாரி ஒருவன் ஞானசேகரன் வீட்டுக்கு வந்து இரவு படுக்க இடந் தரும்படி கேட்டான். அவனிடம் பணமுண்டென்று அறிந்த சேகரன் அவனுக்குப் படுக்க இடம் கொடுத்தான். நள்ளிரவில் அவனைக் கைத்துப்பாக்கியால் சுட்டபின் கணவனும் மனைவியும் மடியைச் சோதித்தனர். ஆனால், இறந்தவன் மடியில் ஒன்றும் காணப்படவில்லை. உடனே வெளிச்சத்தை எடுத்துப் பார்த்தனர். என்ன ஆச்சரியம்! என்ன கொடுமை! அவர்களின் மகன் யேசுதாசன் இறந்து கிடந்தான்.

பிள்ளைகளே! இது எப்படி நடந்தது? படுத்திருந்த வியாபாரி எங்கே? யேசுதாசன் அங்கே எப்படி வந்தான்? இவைஎல்லாம் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும் அல்லவா? வியாபாரி நல்ல கடவுள்பக்தி உள்ளவன். சதா கடவுளைத் தியானித்த படியே பிரயாணம் செய்வான். ஆண்டவர் நம்மை எப்போதும் காண்கிறார். நாம் என்ன நினைக்கிறோம், என்ன செய்கிறோம் என்று அவருக்கு நன்றாய்த் தெரியும்.

வியாபாரி பணம் வைத்திருந்த படியாலும், அது அவனுக்குப் புதிய இடமான படியாலும் அவன் நித்திரை கொள்ளவில்லை. அதிக நேரம் சென்றபின் உள்ளே சேகரனும் மனைவியும் பேசியது அவன் காதிற் பட்டது. அந்தப் பேச்சில் இருந்து தன்னைக் கொல்லப் போகிறார்கள் என்று அறிந்தான். உடனே படுக்கையை விட்டு எழுந்து அருகில் இருந்த மதிற் சுவர் ஓரத்தில் போய்ப்பதுங்கிக் கொண்டு இருந்தான்.

அயலூர் சென்ற யேசுதாசன் அன்று இரவு திரும்பி வந்தான். நடந்த களைப்பினாலும், நித்திரைத் தூக்கத்தினாலும் அலுப்புற்ற அவன் தன் அறைக்குப் போகாமல் வெளியிலே வியாபாரி படுத்திருந்த படுக்கையில் படுத்துக் கொண்டான். இவை ஒன்றையும் அறியாத ஞானசேகரன் அங்கு படுத்துக்கிடந்தவன் வியாபாரிதான் என்று எண்ணித் துப்பாக்கியால் சுட்டான்.

நடந்ததையெல்லாம் மறைவில் இருந்து கவனித்துக் கொண்டு இருந்த வியாபாரி விடிந்ததும் நடந்த எல்லாவற்றையும் தலைமை அதிகாரியிடம் அறிவித்தான். நாட்டு மக்களோ நல்ல மகனைக் கொன்ற நாசக் காரன்! ஒரே மகனைக் கொன்ற பாவி!! என்று தூற்றினர். காவற்காரர் கணவனுக்கும் மனைவிக்கும் கையில் விலங்கு இட்டுக் கடுங்காவலில் வைத்தனர்.

பிள்ளைகளே! நாம் இந்தக் கதையில் இருந்து என்னபடிக்கிறோம்? பிறருக்கு நாம் தீங்கு செய்ய நினைத்தால், பிறருக்கு நாம் தீங்கு செய்தால், அதனால் நாமே துன்பமடைவோம். பிறர் விழும்படி நாம் பள்ளம் வெட்டினால் நாமே அதில் விழ நேரிடும். அல்லது நாம் அதிகமாக நேசித்த ஒருவர் விழ நேரிடும். ஆதலால் நாம் ஒருபோதும் பிறருக்குத் தீங்கு செய்தல் ஆகாது. செய்ய நினைக்கவும் கூடாது. நாம் எல்லோரும்சகோதரர். ஆதலால் ஒருவரோடு ஒருவர் அன்பாய், ஒற்றுமையாய் இருப்போமாக.

## பாலர் கழகம்

1

பள்ளிப் பிள்ளைகள் வாருங்கள்!
பாலர் பகுதியைப் பாருங்கள்
அள்ளிப் பருகும் சுவை பலவும்
அருந்தி ஆர்வம் கொள்ளுங்கள்!

2

கருத்துக் கினிய கட்டுரையும்
காதிற் கினிய நற்கீதமும்
விருப்பிற் குரிய கதை பலவும்
விருந்து கொள்ளவாருங்கள்!

3

சின்னச் சின்னப் பழ மொழியும்,
சிறுவர்க் கேற்ற புதுமொழியும்,
அன்னை தந்த அமுதைப்போல்
அறிவை வளர்க்கும் அவை தாமே.

—K. இரத்தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாத்திமா அன்னையின் அழகியசுரூபங்கள்

இலங்கைக்குவந்த பரிசுத்த பாத்திமாஅன்னையின் சுரூபத்தைப்போன்ற அழகிய சுரூபங்கள் பலசைஸ்களிலும் வந்திருக்கின்றன. 6 அங்குலம்முதல் 60 அங்குலம் வரையிலும் கிடைக்கும்.

மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு வேண்டிய அழகிய சுரூபங்களும், படங்களும், கார்டுகளும், பல ரகங்களிலும் தருவித்திருக்கிறோம். தேவைக்கு ஆடர் கொடுக்கவும்.

**St. Michael's Art Studio,**
6, Jampettah Street,
COLOMBO 13.



சொஸ்தமடைந்து வருகிறவர்களுக்கு
"ஊக்கம் கொடுக்கவேண்டியது
அவசியமாகும்"



போஷாக்கைக் கொடுக்கிறது

# நெஸ்டோமோல்ட்

(மோல்ட்டெட் மில்க்)




சுகவீனத்திற்குப் பிறகு
உடல் பலத்தைத்
துரிதப்படுத்துகிறது

விட்டமின் பி 1 சத்து சேர்த்து நிரம்பக்கொண்டது.


Mal. No. 516. Eng.

## மலேரியா இன்னுமே அதிகரித்து வருகிறது

பொதுசனசுகாதாரத்தைத் திருத்துதற்கென்று உள்ளபடியே பெருங்காரியம் சாதிக்கப்பட்டிருக்கிறது. அதே வேளையிற்றானே அதிர்ஷ்டவசமாகக் கொள்ளைநோய்கள் என்பது ஏறக்குறைய ஓர்கடந்தகால சம்பவமாய் இருக்கின்றது. அவ்வாறிருக்கவும் நோய்களைஎதிர்த்து மனிதன்நடத்தும் போராட்டம் எந்தவகையிலும் பூரண வெற்றியுடன் முடிசூட்டப்பட்டில்லை.

1949-ம்ஆண்டு ஐப்பசிமாதம் சூறிச் நகரில்நிகழ்ந்த உலகசுகாதார ஸ்தாபனத்தின் ஓர்பகுதியான மத்தியதரைக் கடலின் கிழக்குப்பகுதிக்குரிய நாடுகளின் கம்மிற்றிக்கூட்டம்ஒன்றிலே அதிகந்தெளிவாக இதுஎடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றது.

துருக்கியிலும், ஈறானிலும், பாகிஸ்தானிலும், எத்தியோப்பியாவிலும் மேகரோகம், க்ஷயரோகம், மலேரியா முதலாம் கணக்கற்ற பயங்கரநோய்கள் இருப்பதாக அக்கூட்டத்திலே வெளியிடப்பட்டது. மலேரியா கடைசி இடம் வகித்தபோதிலும் குறைந்த ஓர்நோயல்ல. அதுஇன்றுமே தலையெடுத்து நிற்கின்றது. வெளியான அறிக்கைகளிலிருந்து பாகிஸ்தானில் மாத்திரம் வருடம்ஒன்றுக்கு 2,00,000 சனங்கள் மலேரியாகண்டு மடிகிறார்களெனத் தெரியவருகிறது. ஈறானிலே இந்தப் பயங்கரநோய் வருடம்ஒன்றுக்கு ஐந்துலட்சத்துக்குக்குறையாத சனங்களைப் பலியெடுக்கின்றது.

ஆகையால், உலகசுகாதார ஸ்தாபனம் தனதுநீடியவிசாரணையிலே சுகாதாரநிலைமைகளைத் திருத்துவதால் வெற்றியடைவதற்குச்செய்யும் ஓர்முழுமுயற்சியில் இந்தவிஷயமாய் ஆழமாகச் சிந்தித்திருப்பது அற்பமும்ஆச்சரியமன்று.

ஏற்கனவே இரண்டாவதுஉலகயுத்தத்தின்முன்னர் தற்போது இல்லாதொழிந்த சர்வதேச சங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் சர்வதேச கம்மிற்றியானது இப்பிரச்சினைபற்றித் தீர்க்கமான விசாரணை நடத்தியுள்ளது.

1938-ம் ஆண்டுவிடுத்த தன்னுடைய அறிக்கையிலே இந்தக்கம்மிற்றி குயினைனைப்பாவிக்கும்படி சிபாரிசுசெய்திருக்கிறது. மலேரியாவராமல் தடுக்கும் ஓர்நடவடிக்கையாக மலேரியாக்காலம் முழுவதிலும் தினமும் 6 கிறேய்ன் குயினைனும், ஓர்கால்மலேரியா காணுமிடத்து அதற்கோர்மருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் பாவித்துவர வேண்டுமென்று உலகப்பிரசித்திபெற்ற இச்சிறந்தநிபுணர்கள் சிபாரிசு செய்தும், ஆலோசனைகூறியுமிருக்கிறார்கள்.

மனிதவர்க்கத்தின் இத்தண்டனையைப்போக்கும் ஓர்ஆயுதமாகக் குயினைன் தகுதிவாய்ந்ததென்று உள்ளபடியே திரும்பத்திரும்ப அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது. மலேரியா பாந்திருக்கும் இடங்களில் அதாவது அயனாந்த–உபஅயனாந்த நாடுகளிலே மனிதவர்க்கத்துக்கு அருளப்பட்டுள்ள இந்தச்சுவர்க்ககொடையினால் மலேரியாகண்டு வருந்துகிறவர்கள் பெரும் நன்மை அடைகின்றார்கள்.

## சனசமூக நிலையம்

நெடுந்தீவுகிழக்குச் சனசமூகநிலையம் 1-11-51 தொடக்கம் அர்ச்.சவேரியார் சதுக்கத்துக்கு மாற்றப்பட்டபோது, அரசினரால் உதவப்பெற்ற 'ரேடியோ' திறப்புவிழாவிலே அதன் தலைவர் S. சின்னப்புநாயகம்அவர்கள் தலைமைவகித்துப் பேசியவிடத்து: அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம் சம்பந்தமாகப் பொதுச்சனங்கள் அறிவைப்பெறச் சந்தர்ப்பம் அருளப்பட்டிருப்பதால், அதைத் தக்கவகையில் பயன்படுத்திக்கொள்ள அன்பர்கள் ஒத்துழைக்கவேண்டுமெனக்கூறி 'ரேடியோ'வை இந்தஸ்தானத்தில் அமைத்துத்தரக் கரிசனையெடுத்தவர்களைப் பாராட்டி, "ரேடியோ"வைத் திறந்துவைக்கும்படி பொதுநல ஆக்கவேலைகளிற் பேருழியஞ் செய்துவரும் கிராமச்சங்கதலைவர் V. S. ஜேம்ஸ்அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

கிராமச்சங்க தலைவர் எழுந்து, மந்திரி பிரதானிகளை வரவழைத்து நடப்பிக்கவேண்டிய இத்திறப்புவிழாவிலே தம்மைஅழைத்துக் கௌரவப்படுத்தியதற்காக நன்றிகூறி, நாட்டு மக்கள் தங்கள் நாட்டுத்தலைவர்களிற் பற்றுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென அறிவுறுத்திக் கரகோஷங்கள் மத்தியில் அதனைத் திறந்துவைத்தார். கனம் J. மில்ஸ்அவர்களும், திரு. V. J. சின்னையா, திரு. K. இராமநாதன், திரு. T. வேதநாயகம் என்பவர்களும் சனசமூகநிலைய முன்னேற்றங்கருதி அந்நிலையத்திற்கெனத் துறைமுகத்தில் அமைக்கப்படும் புதிய கட்டிடவேலையைப் பூர்த்திசெய்ய யாவரும் ஒத்துழைக்கவேண்டுமெனப் பேசினர்.

ஈற்றில் நிலையத்தைத் தற்காலிகமாக ஸ்தாபிக்க வசதியளித்த மேன்மை தங்கிய மேற்றிராணியாண்டவருக்கும், வண. கட்டளைக்குருவருக்கும், சமூக முன்னேற்றங்கருதி உதவிசெய்த காரியாதிகாரியவர்களுக்கும், வடபாகதலதாபன உதவிக்கம்மிஷனருக்கும், சிறப்பியல்பாற்றிய திரு. க. சதாசிவம் கோஷ்டியினருக்கும், தனாதிகாரி ஐ. நாகலிங்கம்அவர்களுக்கும், காரியதரிசி அ. அல்விறெட்அவர்களால் நன்றிகூறப்பட்டது.

— நிருபர்


சாமிநாதர்

## சஞ்சீவினித் தைலம்

சர்வ நோக்களையும் வெளிப்பிரயோகத்தால் குணமாக்குவது. (பேயின்பாம் போன்றது)

பாலர்கட்கு ஏற்படும் பலவியாதிகளைத் தீர்ப்பதினால் அவர்கட்கு ஒப்பற்ற நண்பன் போன்றது. மருந்துடன் பிரயோகவிபரமும் வைக்கப்பட்டிருக்கிறது.

வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, ஜலதோஷம், இருமல், நெஞ்சு முதுகுக்குத்து, இடுப்புவலி, உளைவு, பிடிப்பு, தலைக்கனம், தலைவலி, ஒருத்தலைக்குத்து, அடிபட்டநோ, வீக்கம், காயங்கள்; தேள், நட்டுவக்காலி, பூரான், குளவி இவற்றின் விஷம், பற்கொதி, காதுப்புண், சூதக வயிற்றுவலி முதலியன குணமாகும்.

(பிரயோகவிபரம் இனமாக அனுப்பப்படும்.)

இனம்: 24-12-51 க்குமுன் ஓடர்பண்ணினால் தபாற்செலவு இனம்.
ஏஜெண்டுகளுக்கு விசேஷ 'டிஸ்கவுண்ட்' கொடுக்கப்படும்.
விபரங்கட்கு எழுதவும்.

அரை அவுன்ஸ் சீசா விலை ரூபா 1–00

சா. அந்தோனிப்பிள்ளை
சாமிநாத மருந்துச்சாலை,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

Sub. Post Office,
Colombothurai.


## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் அதிபரிசுத்த இரக்கத்தினாலும், அர்ச். சின்னத்திரேசம்மாவின் விசேஷ வேண்டுதலினாலும் அர்ச். பிலோமினாவினதும் (முகமாலை) மற்றும்சகல அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டுக்களினாலும் எனதுமகளுக்கு உண்டான வருத்தம் எவ்வளவோ வைத்தியம் செய்து குணமுறாதிருந்தும் பூரணசுகம் கிடைத்தது. இன்னும் எங்களுக்குவேண்டிய சகலஆத்தும சரீர நன்மைகளைஎல்லாம் அன்னார் வல்லதேவனிடம் வேண்டித்தருவார்களாக. இவ் அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்கள் புகழப்படக்கடவதாக. இதைநேர்த்தியின்படி பிரசுரிக்கின்றேன்.

கு. வ. நி.

யேசுவின் திவ்விய இரக்கத்தினாலும் தேவமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர் இவர்களுடைய வேண்டுதலினாலும், என்கணவருக்குத் தகுந்த ஓர் வேலைகிடைத்ததிற்கு நன்றியாக நேர்த்தியின்படி இதைச் சத்தியவேதபாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்கிறேன். இன்னும் யேசுவின் திருஇருதயம் என்குடும்பத்திற்குச் சகல நன்மைகளையும், சமாதானத்தையும் உண்டாக்கும்படியாய் அவரிடம் மன்றாடிக்கொள்கிறேன்.

கொழும்பு. செ. பா.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 15 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org